விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆடி 27 ஜுலைகஸ் 5 இதழ் 183

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 12-8-1986

வாகரையில்—

## ரோந்து சென்றோர் மீது தாக்குதல்!

## 6 படையினர் பலி; ஐவர் காயம்

கொழும்பு, திங்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரைக்கு அண்மையில் தீவிரவாதிகளின் கண்ணி வெடித்தாக்குதல் ஒன்றில் சிக்கிய பாதுகாப்பு படையினரில் ஆறுபேர் கொல்லப்பட்டதுடன் ஐந்து பேர் படுகாயமடைந்ததாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

பாதுகாப்புப்படையினர் இன்று காலை ரோந்து சென்று கொண்டிருந்த பொழுதே இத்தாக்குதல் சம்பவம் நடைபெற்றதாக அரசாங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

வாகரைக்கு சுமார் 2 மைல் வடக்கே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. (ஒ)

## முஸ்லீம்களுக்கு தனிமாநிலம் தேவை

கொழும்பு. திங்கள்

கிழக்கில் முஸ்லீம்களுக்கு தனி மாநிலமே வேண்டும் என அம்பாறை மாவட்ட பள்ளிவாசல்பேரவையினர் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளனர். அத்தீர்மானத்தில் வடக்கு-கிழக்குஇணைப்பைமுஸ்லிம்கள் எதிர்ப்பதாவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### இம்மாதம் முதல் பத்து நாட்களில்

## வடக்கு, கிழக்கில் 29 தமிழர் கொலை!

### இணைப்புக் குழு தகவல்

யாழ்ப்பாணம், செவ்வாய்.

இம்மாதம் 1-ம் திகதி தொடக்கம் 10-ம் திகதிக்கிடையிலான காலப்பகுதியில் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் ராணுவ நடவடிக்கைகளினால் 29 தமிழர்கள் கொல்லப்பட்டனரென பிரஜைகள் குழுக்களின் இணைப்புக் குழு தகவல் வெளியிட்டுள்ளது.

இத்தகவலின்படி மட்டக்களப்பிலேயே அதிகளவில் தமிழர் கொல்லப்பட்டனர். இங்கு மரணமடைந்த தமிழர் எண்ணிக்கை 7 ஆகும். இரண்டாவதாக வவனியாவில் ஆறு தமிழரும் திருமலை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் தலா ஐந்து தமிழரும் கொல்லப்பட்டுள்ளனர்.

மன்னாரில் மூன்று தமிழரும், அம்பாறை மாவட்டத்தில் இரண்டு தமிழரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு தமிழரும் இந்தக் காலப் பகுதியினுள் கொல்லப்பட்டுள்ளதாகஇணைப்புக்குழுவின் தகவலில்தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஊ)

### ● பேச்சுக்கள் தோல்வியடைந்தால்

# இலங்கை தமிழர் விடுதலைபெற இந்தியா உதவவேண்டும்

## சென்னை மாநாட்டில் 'அமிர்

(சென்னை)

"இனப்பிரச்னைக்கு அரசியல்தீர்வுகாண தற்போது மேற்கொள்ளப்படும் சகல முயற்சிகளும் தோல்வி அடையுமேயானால் இலங்கைத் தமிழர்களை காப்பாற்றி. அவர்கள் விடுதலை பெறுவதற்கு இந்தியா உதவவேண்டும்-"

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று முன்தினம் இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக சென்னையில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

"தமிழர் தாயகத்தின் பிராந்திய ஒருமைப்பாட்டுக்கான எமது கோரிக்கையை தமிழர் விடுதலைக் கூட்டணி விட்டுக் கொடுக்காது. எனினும் தமிழர் தாயகத்தை பிரிப்பதற்கு இந்தக் கட்சி ஒருபோதும் உடந்தையாக இருக்காது.

"எங்களுள் மிதவாதிகள்,

(4-ம் பக்கம் பார்க்க)

## 'சென்னையில் பெண் உளவாளி கைது'

சென்னை, ஆகஸ்ட் 11

தமிழ்ப் போராளிகளைப் போல் நடித்து இலங்கை அரசுக்கு உளவு பார்த்ததாக இந்தியப் பிரஜை ஒருவரைச் சென்னைப் பொலிஸார் கைது செய்து விளக்க மறியலில் வைத்துள்ளனர்

இத் தகவலை 'குமுதம்' சஞ்சிகை வெளியிட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் திருவான்மியூரைச் சேர்ந்த ரதி குணசேகரம் பிள்ளை என்ற 19 வயதுப் பெண்மணியாவார். இவர் இலங்கையில் படித்தவர். (கை)

'ஷெல்' தாக்குதல்:

## காயமடைந்த மற்றொருவர் மரணம்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ். கோட்டை இராணுவத்தினரின் 'ஷெல்' தாக்குதலுக்குள்ளாகி காயமடைந்த மற்றொருவரும் நேற்று மரணமானார். இவருடன் ஷெல் தாக்குதலால் இறந்தவர் தொகை நான்காக அதிகரித்துள்ளது.

யாழ். வாழைப்பழச்சந்தையில் நின்றிருந்தபோது கழுத்தில் ஷெல் தாக்கியதால்அவசர சிகிச்சையின்பின் 4ம் வாட்டில் அனுமதிக்கப்பட்டிருந்தநாவற்குழியைச் சேர்ந்த ச. மத்தியூஸ் (24 வயது) என்பவரே

(4-ம் பக்கம் பார்க்க)

வல்வையில் சம்பவம்:

## நேரடி மோதலில் படையினர் ஒருவர் பலி

வல்வெட்டித்துறை, திங்கள்

வல்வை இராணுவ முகாமுக்கு முன்பாகவுள்ள தோட்டவெளியில் வைத்து இராணுவத்தினர் மோட்டார் 'ஷெல்' அடிப்பதற்கு ஆயத்தஞ்செய்த வேளை தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவத்தினரைக் குறி பார்த்துச் சுட்டபொழுது ஒருவர் அந்த இடத்திலேயே பலியானார் என்றும், மற்றைய இராணுவத்தினர் மீதும் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர் என்றும். இதனால் நிலைகுலைந்த இராணுவத்தினர் பலியானவரையும் இழுத்துக் கொண்டு முகாமுக்குத் திரும்பினர் என்றும் 'புலிகளின் குரல்' தெரிவிக்கின்றது.

இதேவேளை முகாமைவிட்டுத் தோட்டவெளியில் நின்ற பல இராணுவத்தினர் மீது போராளிகள் தாக்கியதில்

(4-ம் பக்கம் பார்க்க)

## "வடபகுதியில் ஆயுதத் தொழிற்சாலை"

### — கூட்டுப்படைத் தளபதி

கொழும்பு, திங்கள்

யாழ். குடாநாட்டில் தமிழ்த் தீவிரவாதிகளின் ஆயுதத் தொழிற்சாலையொன்று இருப்பதாக கூட்டுப்படைகளின் தளபதி ஜெனரல் ரணதுங்கா கொழும்பு பத்திரிகைக்களித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

சனநடமாட்டம் மிகுந்த பகுதியில் அமைந்துள்ள இத் தொழிற்சாலை விடுதலைப்புலிகள் இயக்கத்தினுடையது எனவும் தமது பேட்டியில் தெரி

(4ம் பக்கம் பார்க்க)

மாங்குளத்தில்—

## வயோதிபர் உட்பட 15 பேர் கைது

யாழ்ப்பாணம், செவ்வாய்.

இராணுவத்தினர் தாம் கைதுசெய்த மூன்று இளைஞர்களை முகமூடி அணிந்து கூட்டி வந்து வயோதிபர் உட்பட மேலும் 15பேரை கைதுசெய்து கூட்டிச்சென்றனர். இச்சம்பவம் மாங்குளத்தில் நடைபெற்றது. இவர்களில் ஐந்து பேரை

(4-ம் பக்கம் பார்க்க)

எரிபொருள் நிலையத்துக்கு—

## சென்றஊழியர் இளைஞரினால் திருப்பி அனுப்பப்பட்டனர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ் நகரிலுள்ள எரிபொருள் நிலையமொன்றிலிருந்த உபகரணங்களை எடுக்கச் சென்ற கூட்டுத்தாபன ஊழியர்கள் இளைஞர் கோஷ்டியினரால் திருப்பி அனுப்பப்பட்டனர்.

யாழ். நகர் மணிக்கூடு வீதி

(4-ம் பக்கம் பார்க்க)

## "இந்திய முயற்சிகளை சிறந்த முறையில் பயன்படுத்தவேண்டும்"- அமைச்சர் காமினி

கொழும்பு, திங்கள்

"இனப்பிரச்னையைத் தீர்த்துவைக்க இந்தியா இதயபூர்வமாக எடுத்துவரும் முயற்சிகளை இலங்கை சிறந்தமுறையில் பயன்படுத்த வேண்டும் என காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திஸாநாயக்கா கூறியுள்ளார்.

நுவரெலியாவில் நடைபெற்ற பொதுவைபவம் ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே திரு. காமினி திஸாநாயக்கா இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் பேசும்போது; நாட்டில் எழுந்துள்ள நிலமைகளுக்கேற்ப நிர்வாக முறை அமைய வேண்டும். விரக்திகாரணமாக வடக்கி

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

அளவெட்டி வடக்கிலும் கும்பிழாவளைப் பிள்ளையார் கோவிலுக்கு மேற்கு வீதியிலும் உள்ள கட்டையன் சிமா என்னும் 10 நில பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க:- திருமதி. தர்மலிங்கம் கேணிக்கரை அளவெட்டி.
(C 3987)

நல்லநிலையிலுள்ள பாவனையிலுள்ள பெரிய ''Usha'' குளிர்சாதனப் பெட்டியும், Singer குளிர்சாதசாதனப்பெட்டியும், புதிய Singer தையல் மெஷின், zigzag bobinamagica 270 உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: No 7, கஸ்தூரியார் ஒழுங்கை, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
(C 4003)

### வாடகைக்கு

வீடியோ, கசற், டெக் என்பன வாடகைக்கு கொடுக்கப்படும். தொடர்பு: K. சங்கர், நாச்சிமார் ஒழுங்கை. நவாலி, மானிப்பாய். [C 3968]

### வகுப்புகள்

Spoken English புதிய நாளாந்த / வார இறுதி வகுப்புகள். ஆரம்பம்: 18-8-86 நேரம் மாலை 4 - 5. சனி / ஞாயிறு 16-8-86. நேரம் மாலை 3 - 5. ஆசிரியர்: S. B Iyar, 12, வைமன் வீதி. நல்லூர். [C-4011]

G.C.E. A/L 87-ம், 88-ம் ஆண்டுகளுக்கான மனைப் பொருளியல் வகுப்புகளும், செயல்முறை வகுப்புகளும் ஆரம்பமாகின்றன. விபரங்கட்கு: G S. Ladies Academy, Victoria Road, Jaffna.
(C 4018)

பௌதிகம் A/L 87 பிரிவுக்கு மின்னியல் ஆரம்பம்: 16-08-86 சனி, ஞாயிறு 2-30—3-30. ஆசிரியர் திரு. மணியம். New Science Academy, Jaffna,
[C-3991]

A/L 87 கணித வகுப்புக்கள். வெக்டர் வேலாயுதம் அவர்களால் தூய பிரயோக கணித புதிய வகுப்புக்கள் ஆரம்பம். விபரங்கட்கு; நிர்வாகி, நியூ சயன்ஸ்அக்கடமி, B M C.க்கு முன்பாக, யாழ்ப்பாணம். பிந்திய விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது. [C-3990]

### சேவை

ரான்ஸ்போமர், மோட்டர், மின் விசிறி, மின் அடுப்பு, கிறையிண்டர், வாசிங்மெசின், ஸ்ராட்டர், ரிப்சுவிச் ஆகியன திருத்த, ரீவயிண்டிங் செய்ய, வயறிங் வேலைகள் செய்ய: Omega, Manipay Road, Jaffna. (ஈழநாட்டிற்கு எதிரில்) பழுதடைந்த, உபயோகிக்கமுடியாத மேற்கூறிய உபகரணங்களும் விலைக்கு வாங்கப்படும். [C-4010]

கலர் பிலிம் சுருள்களை PROCESSING + PRINTING செய்வதற்கு
கொழும்பு ஸ்ரூடியோ
(A 1041)

# மணல் ஏற்றுவது நிறுத்தப்பட்டது

பண்டத்தரிப்பு, திங்கள் மாதகல் கடற்கரை பகுதிகளில் நீண்ட காலமாக இடம் பெற்றுவந்த சட்டவிரோத மணல் எடுத்தல் சம்பவங்கள் இளைஞர்குழுவொன்று மேற்கொண்ட தீவிர தடுப்பு நடவடிக்கையை அடுத்து முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது.

இளைஞர் குழு விடுத்த எச்சரிகையை மீறி இப்பகுதியில் மணல் அள்ளிய மாட்டுவண்டில் சொந்தக்காரர் இருவர் கடந்த வாரம் கையும்மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு ஏற்றிய மணல் பறிமுதல் செய்யப்பட்டது.

இச்சம்பவத்தை அடுத்து இப்பகுதியிலிருந்து நீண்டகாலமாக மணல் ஏற்றி வேறு இடங்களுக்கு மாட்டு வண்டில்களில் கொண்டுசென்று விற்றவர்கள் அதனை கைவிட்டுள்ளனர். (இ)

## ஓராண்டு நினைவஞ்சலி



திரு. சீ. க. பேரம்பலம்
(ஆசிரியர்)
மலர்வு: 12-10-1931
உதிர்வு: 24-07-1985
திதி: 12-08-1986

அன்புடனும், பாசத்துடனும்வாழ்ந்து எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில்கொண்ட எம் அன்புத் தெய்வமே! எங்கள் குடும்ப ஒளிவிளக்கே! உங்கள் மதிமுகமும் சொல்லும் செயலும் எங்களால் மறக்க முடியுமா? நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவு எங்களை விட்டகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.
''லக்சுமி வாசா'',
சங்கானை. [C-4007]

## இரண்டாம் வருட நினைவஞ்சலி



அமரர்
வ. இராமலிங்கம்
தோற்றம்: 17-03-1926
மறைவு: 03-08-1984
திதி: 12-08-1986

ஆண்டுகள் இரண்டு உருண்டோடி விட்டன. ஈடுசெய்யமுடியாத தங்கள் இழப்பால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமகள்.
''ஜமுனா'',
சுதுமலை மேற்கு,
மானிப்பாய். [C-3985]

## 7-வது ஆண்டு நினைவஞ்சலி



பொலிஸ் இன்ஸ்பெக்டர்
S. P. குருசாமி
தோற்றம்: 15-10-1922
மறைவு: 01-07-1979
திதி: 12-08-1986

கண்ணென எம்மைக் காத்தீர்
கவலையால் நாமோ இந்த மண்ணிடை வருந்த விட்டே
வானகம் அடைந்தீர் அந்தோ
விண்ணினை அடைந்தே ஏழு
ஆண்டுகள் மேவிற்றென்றும்
எண்ணத்தில் தெய்வமாகி இருக்கின்றீர் நீவிர், ஐய!

அன்பு மனைவி,
ஆசை மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்: ரமேஷ், பிரகாஷ் ஆகாஷ், பிரதீஸ், சுரேஷ்
204. மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம். (C-3961)

## ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி இ. பாக்கியம்
மலர்வு; 1920-01-14
உதிர்வு: 1985-07-24
திதி: 12-08-86

அன்பினால் எம்மை வளர்த்த அன்னையே நீங்கள்எம்மைப்பிரிந்து ஓராண்டு ஆனாலும் உங்கள் நினைவு எம்மை விட்டு என்றும் நீங்காது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறோம். உங்கள் பிரிவால் துயருறும் மகள், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்: திருமதி க. விமலபூசணி. 'விமல வில்லா', நீர்வேலி.
(C 4015)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## தேவை

யாழ். நகரில் பிரபல நிதி அமைப்பொன்றில் உயர் பதவியில் கடமையாற்ற விரும்பும் ஏதாவது வங்கியிலோ அன்றி நிதி நிறுவனங்களில் கடமையாற்றி அனுபவம் பெற்றவர்கள் எதிர்வரும் சனிக்கிழமை (1986-08-16) காலை 10-00 மணிக்கு 81/1, கே. கே. எஸ். வீதி, கொக்குவில் என்ற முகவரியில் சமுகமளிக்கவும்

ந. பரராஜசிங்கம்,
பணிப்பாளர்.

11-08-86. [C 4017]

## நியூ விக்ரேஸ்

புதிய வீடியோ பட வெளியீடுகள்:

1. ஆயிரம் பூக்கள் மலரட்டும் (தரமான பிரதி)
   மோகன், கீதா, கவுண்டமணி, செந்தில்.
2. வசந்த ராகம் (தரமான பிரதி)
   விஜயகாந், அமலா, ரகுமான்.
3. எங்கள் தங்க ராஜா (ஒறிஜினல் - கலர்)
   சிவாஜி, மஞ்சுளா.
4. AMERICAN COMMANDOS } (Attack Film)
5. TOY SOLDIERS }

நியூ விக்ரேஸ் எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்,
தொலைபேசி: 23532. A1043

## பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க் ★ கனடா

விரைவில் செல்ல விரும்புபவர்கள் எம்முடன் உடன் தொடர்புகொள்ளவும்.

அத்துடன்

★ ஜேர்மனி ★ சுவிஸ்
★ பிரான்ஸ் ★ இத்தாலி

ஆகிய நாடுகளுக்கு எமது பிரதிநிதி வெகுவிரைவில் அழைத்துச்செல்லவுள்ளார்.

மற்றும்

பாஸ்போர்ட், விசா, ரிக்கட், பொன்டிங் என்பனவும் வெகுவிரைவில் செய்து கொடுக்கப்படும்.

### லிப்ருஸ் லிமிற்ரெட்

R. G. பில்டிங்,
70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

2nd Floor,
York Building,
94 1/7, York Street,
Colombo - 1.
Tele. No. 25508.

[A-1042]

Open Daily 9-00 a. m. — 11-30 p. m.

## நினைவில் வைத்திருங்கள்

# HOTEL GNANAMS

★ பாதுகாப்பான இடம்
★ ரம்மியமான சூழல்
★ மிகவும் குறைந்த விலையில் நவீன வசதிகள்
★ அன்பான உபசரிப்புடன் Chinese உணவுகள் [20/- to 40/-]
★ A/C or Non A/C அறைகள் [50/- to 200/-]

மாதக்கணக்கில் அறை வாடகைக்குப் பெறுவோருக்கு உணவுகளுடன் கூடிய விசேட கழிவு வழங்கப்படும்.

இன்னும்

★ திருமணம் ★ பிறந்தநாள் விழா
★ பிரியாவிடை ★ விருந்துபசாரம்

இவற்றிற்கு உகந்த இடமாக புதிய நிர்வாகத்தில் புகழ்பெற்று விளங்குகிறது.

Also

Relax at beer garden [Beer 32/-]
For more information, Contact:
GENERAL MANAGER,

HOTEL GNANAM'S
299, CLOCK TOWER ROAD, JAFFNA,
Telephone: 22082 — 23067 (A1039)

**மணிவாக்கு**

கேட்டிவுறுதி கூட்டு முடைமை.

— ஒளவையார்

# நமது நோக்கு

## சனசந்தடிக்குள் 'ஷெல்'

மூந்தநாள் ஞாயிற்றுக்கிழமையாக இருந்த போதும் யாழ். பெரியகடை வாழைப்பழச் சந்தை அமளிப்பட்டதற்கு நல்லூர் கொடியேற்றமே முக்கிய காரணம்.

எவ்வாறு கண்டியில் இன்று நடைபெறும்சிங்கள பெரஹரா (பிரகாரம்) பௌத்த கலாசார பெருவிழா மிகக் கோலாகலமாக நடைபெறுகின்றதோ அவ்வாறே நல்லூர் கந்தசுவாமி மகோற்சவம் சைவ மக்களின் தெய்வ பக்தியை சிறப்பித்துக்காட்டும் அலங்காரவிழாவாகும்

கண்டி விழாவிற்கு பெருத்த அரச பாதுகாப்பு உண்டு. நல்லூருக்கு உண்டானது தொண்டர் படையே.

இக்காலத்தில் இது போதுமாவென்ற சந்தேகம் கிளம்புவது இயற்கை. சஞ்சலம் அதிகரிக்கும்போது பொறுப்பு எல்லாவற்றையும் நல்லூர்க் கந்தனிடம் ஒப்படைத்துவிட்டு நடுநீரில் மிதப்பது போல் பக்த கோடிகள் குடாநாடு அனைத்திலும் காணப்படுகின்றனர்.

அந்தக் கூட்டத்தினரைச் சேர்ந்தவர்களே கொடியேற்றத்தன்று பெரியகடைக்கு வாழைப்பழம் விற்கவும் வாங்கவும் வந்த மக்கள்.

கோட்டை இராணுவம் பற்றிய அச்சம் இருந்த போதும் தங்கள் உயிர் ஆண்டவன் கையில் என்ற நம்பிக்கைகொண்ட மக்களில் அன்று மூன்று பேர் பலியானதும் பதினொரு பேர் காயப்பட்டதும் நகர் நடுவே இடம்பெற்றகோர நிகழ்ச்சி

புதுடில்லியில் இந்திய இராணுவத்தின் முன்னாள் ஜெனரல் அருண் வைத்யா அதே நாளில் சுட்டுக்கொல்லப்பட்டார் என்ற செய்தியும் எங்கள் நேற்றைய பிரசுரத்தின் முதற்பக்கத்தில் வெளிவந்திருக்கிறது.

புதுடில்லிப் பெரிய கொலையும், யாழ்ப்பாணம் பெரியகடைக் கொலைகளும் இரு வேறுபட்ட சம்பவங்களென்று விடயம் தெரிந்தவர்கள் கொள்ளமாட்டார்கள்.

யாழ்ப்பாணப் பத்திரிகை யாழ்ப்பாணச் சம்பவத்துக்கு பிரபல்யம் அளித்தது நியாயமானது. அதே சமயம் புதுடில்லிக்கும் இதற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதை இன்றும் பலர் அறியார்

இலங்கையில் நடைபெறும் உள்ளூர்ப்போரும், இந்தியாவில் தொடரும் பயங்கரவாதமும், இந்திய உபகண்டத்தை நிலைகுலைக்க எடுத்துவரும் பிரயத்தனங்கள் என்பது உலக அரசியலை ஆழமாக அவதானித்தவர்களின் கருத்து.

தமிழ்ப் போராளிகளை இலங்கை அரசு பயங்கரவாதிகள் என்று கணிப்பதால், பயங்கரவாதத்தை உலகிலிருந்து அழித்துவிடவேண்டுமென்று சபதங்கொண்ட நிறுவனங்களை நாடுகிறது இந்திய அரசு தன் தேசத்தில் பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்ட முயலும் போது இலங்கைத் தமிழ்ப் பயங்கரவாதத்திற்கு புகலிடம் அளிப்பதேன்? இலங்கை அரசு எழுப்பும் விளக்கமற்ற இந்த வினா இன்றைய சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கு முரணானது.

ஆசிய கண்டத்தில் இந்தியா தலைநிமிர்ந்து தன்னுடைய சுதந்திரத்திற்கு உறுதிதேடுவதுடன் உலகில் எங்கு அடிமைத்தனம் அநீதி, காணப்படுகிறதோ அவற்றை எதிர்க்கும் ஆன்மிக பலம் பெற்றிருக்கிறது.

இந்துமாகடல் பிரதேசத்தில் இந்தியாவின் செல்வாக்கு அதிகரிப்பதானால், ஆசியாவை நெடுங்காலம் அடிமைப்படுத்திய ஐரோப்பிய முதலாளித்துவம் மூட்டை கட்டவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

ஐரோப்பிய முதலாளித்துவம் இன்றுகைமறியிருப்பது வெளிப்படை சோவியத் ரஷ்யாவுடன் உறவுகொண்டாடி சோஷலிசம் பேசிவரும் இந்தியா தங்கள் சொல்லுக்கடங்காது. எனவே தெற்காசியாவில் பாகிஸ்தானே ஏகாதிபத்திய பாதுகாவலன் என்ற இரகசிய அரசியல் கொள்கை, இந்தியாவுக்கு மட்டுமல்ல, அதன் ஸ்திரத்தைக் குலைக்க உதவும் இலங்கைக்கும் யமனாகவிருப்பது பரமரகசியமாகிறது.

இலங்கை தமிழ்ப்போராளிகள் தமிழ்நாட்டில் வேரூன்றுவதும், பஞ்சாப்பில் சீக்கியரும் இந்துக்களும் கலவரப்படுவதும் பரத கண்டத்தை வடக்கிலும் தெற்கிலும் பிய்த்துப்படுங்க உதவும் திட்டம் எனக்கொள்ளப்படுகிறது. அது உண்மையானால் நன்றாகச்செயற்படுகின்றது.

இலங்கை வாழ் சிங்கள மக்கள், தமிழ்மக்கள்இதனை உணரும் காலம் வந்தே தீரும். போர் முடிந்தே தீரும், அதற்குமுன் தினசரி நிகழும் அழிவுகள் நிறுத்தப்படுவதே இன்றையதேவை.

1942ல் மகாத்மா காந்தி 'வெள்ளையனே வெளியேறு' என்றபிரகடனத்தை அகில இந்திய காங்கிரஸ் கூட்டத்தில் வெளியிட்டுள்ளார் அத்துணிவான செயல் இந்திய சுதந்திர வரலாற்றில் ஒரு முக்கியமான மைல்கல். சென்ற வாரம் அதன் 44வது ஆண்டு தினம் அகில இந்தியாவிலும் நினைவு கூர்ந்து கொண்டாடப்பட்டது.

இன்று இங்கு தமிழர்களைப் பலியெடுக்கும் இலங்கை ராணுவத்தின் கொடுமை முற்றுப் பெறுவதற்கு 'ராணுவமே வெளியேறு' என்று மக்கள் பெயரில் இத்தகைய பிரகடனம் அவசியமாகின்றது.

# திருத்தொண்டத்தொகை செய்த திருவாளன்

தமிழக வரலாற்றில் நான்காம் நூற்றாண்டிலிருந்து ஏழாம் நூற்றாண்டு வரையுள்ள காலம் இருண்ட காலம் எனப்படும். அக்காலத்தில் ஆண்ட அரசர்களைப் பற்றியோ வள்ளல்களைப் பற்றியோ வாழ்ந்த மக்களைப்பற்றியோ அதிகமாக எதுவும் தெரியவில்லை

ஆனால் கி பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்து பதின்மூன்றாம் நூற்றாண்டுவரையான காலம் தமிழகத்தின் தெய்வீக இசைப் பொற்காலம் எனக் குறிப்பிடலாம். அக்காலத்தில் பக்தி இசை தமிழகத்தில் தோன்றிச் செழிப்புற்றிருந்தது. இக்காலத்தின் முற்பகுதியைத் தெய்வீக இசைத் தோற்றத்தின் காலமாகவும், பிற்பகுதியை அதன் வளர்ச்சிக்குரிய காலமாகவும் சில அறிஞர்கள் கருதுகின்றனர். ஏழாம் நூற்

## இன்று சுந்தரர் குருபூசை

றாண்டிலிருந்து பத்தாம் நூற்றாண்டு வரை நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றி நனும்இன்னிசையால் நற்றமிழ பரப்பினர்கள். இத்தொண்டர்கள் வரிசையில் கனதியான இடத்தை வகிக்கும் நாயனாராக பெரியபுராணம் என்ற வீரகாவியத்தில் சேக்கிழாரால் காட்டப்படுபவர் சுந்தரமூர்த்திசுவாமிகள் ஆவார்.

சமணசயத்தில் மூழ்கிக் கிடந்த மக்கள் மத்தியில் ஒரு சைவபக்திப் பேரியக்கத்தை உருவாக்கி அதற்குத் தலைமை தாங்கி "நாமார்க்கும் குடியல்லோம்" என்ற வீர உணர்வைத் தட்டியெழுப்பியவர் நாவுக்கரசர். அந்த உணர்வை மக்கள் மத்தியில் வேரூன்றி விரிவடையச் செய்தவர் சம்பந்தர். மக்களின் உள்ளத்தை இலகுவில் கொள்ளை கொள்ளும் இசையே மக்களை விடுவிக்கும்முயற்சி வெற்றி பெறுதற்கேற்ற கருவியென்று இவர்கள் கருதியிருக்கலாம். இதனால் இவர்கள் ஓரிடத்தில் இருத்தலின்றி நாடு முழுவதுமிருந்த தலங்களனைத்திற்கும் சென்று இறைவனை இன்னிசை பாடித் துதித்து மகிழ்ந்தனர் அடியார் கூட்டம் தம்மைச் சூழ்ந்து வர ஊர்தோறு சென்று இறைவனை இன்னிசையால் பாடி மகிழ்ந்தார்களாதலால் மக்களனைவரும் அவர் நெறியில் சேர்ந்ததன்றியும் இசையுணர்ச்சியுடையார்களாகவும் ஆயினர் இந்தவரிசையில் இவர்களையடுத்து வந்தவர்தான் சுந்தரர்

சேக்கிழார் செய்த வீரகாவியத்தின் காவியநாயகர் சுந்தரரே. இவரது வரலாற்றைத் தடுத்தாட்கொண்ட புராணமாசத் தொடங்கி இடையில் ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணத்திலும் சேரமான் நாயனார் புராணத்திலும் இவர் பெருமை கூறி, ஏனையநாயன்மார்களின் கதைகளையும் கூறிக்கொண்டுபோய் இறுதியில் வெள்ளை யானைச் சருக்கத்திலே இவர் வரலாற்றை நிறைவு செய்கிறார்சேக்கிழார்.

சேக்கிழார் சுந்தரமூர்த்தி நாயனாரைக் காவிய நாயகனாக கொள்ள ஒருகாரணம் உண்டு. தலயாத்திரை செய்து தமிழோடிசை பாடியதோடு அமையாமல் சைவபக்திப் பேரியக்கத்தில் பங்குகொண்டஅடியார்களின் பெயர்களையும் அவர்களது சாதனைகளையும் தொகுத்துத் திருத்தொண்டத்தொகை செய்ததன்மூலம் தவல் தொகுப்புப் பணியும் செய்தவர் சுந்தரர். அவர் அதனைச்செய்திராவிட்டால்பெரிய புராணம் எழுந்திராது. திருத்தொண்டத்தொகையை முன்னிட்டே நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதி பாடினார். இவையிரண்டையும் தழுவியே சேக்கிழார் பெரிய புராணம் பாடினார்

திருத்தொண்டத் தொகையைத் தந்த சுந்தரர் காலங் கடந்து வாழ்ந்த கண்ணப்பா முதல் திருமுறை ஆசிரியரான சம்பந்தர்வரை பல நாயன்மாரைத் தமது பாடல்களிற் பாடுவார். வேறு எவரும்செய்யாத முக்கியபணி அது! திருத்தொண்டத்தொகையில் மட்டுமன்றித் தமதுதேவாரப் பதிகங்களிலும் தமக்குமுன் வாழ்ந்த நாயன்மாரைப் புகழ்ந்து பாடியுள்ளார் இவர்.

**கோகிலா மகேந்திரன்**

ஒரு நாவில் உரைசெய்ய ஒன்னு நாவுக்கரசர், ஒப்பில்லாத தன் அன்பால் கண்ணிடந்தப்பிய கண்ணப்பர், தந்தைதாள் துண்டமிட்டு இறைவன்தாள் பற்றிய சண்டேசர், அருந்தமிழால் இரும்பிணி நீங்கிய ஏயர்கோன்... போன்ற தொடர்களால் இவர் அவர்களைப் புகழ்தல் காணலாம்.

அரியவற்றுளெல்லாம்
அரிதே பெரியாரைப்
பேணித்தமராக் கொளல்

என்றார் வள்ளுவர். அந்த அரியகுணம் இவரிடம் காணப்பட்டது.

மற்ற மனிதர்களின் நல்ல பகுதியைக் காணுதல் பண்புடையார் இயல்பு. அதுவே வெற்றிகரமான ஒரு வாழ்வின் தன்மையும் கூட.

தமிழகத்தில் சைவபக்திப் பேரியக்கத்தைக் கட்டியெழுப்பி வளர்த்த ஏனைய அடியார்களிடம் இவர் நன்றியுணர்வு கொண்டிருந்தார் என்றும் நாம் கருதலாம் நன்றியுடையவனாக இருத்தல் நாகரிகமடைந்த மனிதனின் குண இயல்பு

இறைவனைத் தோழனாகக் கொண்டு பதிகம் பாடிய சுந்தரர் தமது திருத்தொண்டத் தொகையிலே 14 நாடுகளையும் 150 திருத்தலங்களையும் அண்ணாமலை, குணமலை, முதலிய மலைகளையும், காவிரி, அரிவியாறு முதலிய ஆறுகளையும் குறிப்பிட்டுச் சிறந்த வரலாற்று ஆசிரியர் ஆகிறார்.

சுந்தரரின் இறைபக்தி உண்மையான உள்ளன்புடன் கூடியது. தில்லைக்குச் சென்ற சுந்தரர் எல்லையில்லாத திருநடனம் செய்யும்இறைவனை ஒடுங்கிய உள்ளத்தோடு பரவிய காட்சியைச் சேக்கிழார் இப்படிக் கூறுவார்.

"ஐந்துபேரறிவும் கண்களே
கொள்ள
அளப்பரும் கரணங்கள்
நான்கும்
சிந்தையேயாகக் குணம் ஒரு
மூன்றும்
திருந்து சாத்துவிகமே
யாக
இந்துவாழ் சடையான்
ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங்
கூத்தின்
வந்தபேரின்ப வெள்ளத்துள்
திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில்
மலர்ந்தார்"

திருத்தொண்டத் தொகை பாடிய நம்பியாண்டார் நம்பி ஒவ்வொரு நாயன்மாரையும் ஒன்றுஅல்லது இரண்டு பாடல்களில் பாடியபோது சுந்தரரைப்பற்றி மட்டும் எட்டுப் பாடல்களில் பாடுவார். சுந்தரரை அவர்காலத்து மூவேந்தரும் பல்லவரும் பிறரும் நன்கு மதித்துப் போற்றினர். நாமும் இன்று அவர்பணி நினைவோம்.

## இன்று வரதராஜப்பெருமாள் கொடியேற்றம்

வட்டுக்கோட்டை, திங்கள்

பொன்னாலை அருள்மிகு வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று (12-8-86) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை மேற்படி ஆலயத்தில் ஆடிப்பூர விசேட பொங்கல் விழா மிகவும் விமரிசையாக நடைபெற்றது இங்கு குறிப்பிடத்தக்கது. ஞாயிறு வாரம் மாலையில் மேற்படி ஆலயத்தில் பக்தர்கள் கூட்டம் வழமையாக அதிகரித்து வருகிறது. பஜனை பாடல்கள் நிகழ்ச்சியும் மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றது.

## ஆடிச்செவ்வாய் திருவிழா

யாழ்ப்பாணம், செய்வாய்

திருநெல்வேலி அருள்மிகு முத்துமாரி அம்பாள் கோவிலில் ஆடிச்செவ்வாயான இன்று காலை 11 மணிக்கு அம்பாளுக்கு அஷ்டோத்தர சங்காபிஷேகமும், பிற்பகல் 5 மணிக்கு சந்தனக்காப்பு நவசக்தா அர்ச்சனையும் நடைபெறும்.

வெள்ளிக்கிழமை காலை சங்காபிஷேகமும் பிற்பகல் மஞ்சள் காப்பு அர்ச்சனையும் நடைபெறும். (அ)

## நல்லை ஆறுமுகவன்!

ஏரம்பன் தம்பியவன் ஏத்துமுயர் நல்லை
வீரவேல் கைக்கொண்ட வேலனவன் — சூரர்குலம்
வேரோ டழிய வேல்விட்ட வேல்முருகன்
பேரோதிப் பேறு பெறு.

ஃ ஃ ஃ

ஐயன் அறுமுகவன் ஆணவம் போக்கும் வேற்
கையன் உயர்நல்லைக் கந்தனவன் — வையத்துச்
செந்தமிழர் தம்மிறைவன் சேவற் கொடிகொண்ட
கந்தனவன் ஆண்டருள்வான் காண்.

ஃ ஃ ஃ

ஒண்டொடியாள் றெய்வானை ஒய்யாரி வள்ளியொடு
அண்டிவரும் நல்லை அறுமுகவன் — மண்டலத்துப்
பைந்தமிழர் தெய்வமெனப் பருதித்த பாவகியை
நைந்துருகி நாடோறும் நண்ணு.

ஃ ஃ ஃ

— கவியரசு வெண்பாமணி முருகசூரியன்

[ இன்று நல்லூர் முருகன் 3-ம் திருவிழா ]

# சட்டவிரோத மின்இணைப்பு அகற்றப்பட்டது

மாவிட்டபுரம், திங்கள்

வலி வடக்குப்பகுதியில் சட்டவிரோத மின்னிணைப்பை அகற்றுவதில் மின்சாரப் பகுதி ஊழியர்கள் தீவிரமாக செயற்பட்டதன் காரணமாக உப மின் நிலையங்கள் எரிந்து போகும் ஆபத்தான நிலை நீங்கியுள்ளதுடன் மின் பாவனையாளர்களும் கிரமமான முறையில் மின்னைப்பெற வழியேற்பட்டுள்ளது.

வலி வடக்குப் பகுதியில் கடந்த சில வாரங்களாக தெல்லிப்பழை, காங்கேசன்துறை, மைலிட்டி உப அலுவலகங்களின் மின்சார ஊழியர்கள் சட்டவிரோத மின் இணைப்புக்களை அகற்றுவதில் ஈடுபட்டிருந்தனர்.

இதன் பயனாக ஏராளமான சட்டவிரோத மின்னிணைப்புக்கள் இப்பகுதியில் அகற்றப்பட்டுள்ளதுடன் அதற்குப் பாவிக்கப்பட்ட மின்வயர்கள் சந்திகளில் போட்டு எரிக்கப்பட்டன.

தெல்லிப்பழை உப அலுவலக எல்லைக்குள் உள்ள கீரிமலையில் சட்டவிரோத மின் இணைப்புக்களை அகற்றும் போது சிலர் அதனைத் தடுக்க முற்பட்டதால் அப்பகுதிக்கான மின்சார விநியோகம் 24 மணிநேரத்திற்கு முற்றாக நிறுத்தப்பட்டு பின் சமரச முயற்சியினால் அப்பகுதிக்கு மின்சாரம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தெல்லிப்பழை உப அலுவலக எல்லைக்குள் மின் அத்தியட்சர் திரு. பொ. ஜெயரத்தினசிங்கம் தலைமையிலும் காங்கேசன்துறை உப அலுவலக எல்லைக்குள் மின்கம்பி இழுப்பவர் திரு. எஸ் வேலுப்பிள்ளை தலைமையிலும், மயிலிட்டி உப அலுவலக எல்லைக்குள் மின்கம்பி இழுப்பவர் திரு. வி. தங்கராசா தலைமையிலும் மின்சார ஊழியர்கள் இப்பணியில் ஈடுபட்டனர். [எ-இ]

## இந்திய முயற்சிகளை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லும் கிழக்கிலும் அரசியல் குழப்பங்கள், இரத்தக் களரிகள் ஆகியன இடம்பெற்றுள்ளன. இதனால் அபிவிருத்தி பெருமளவு பாதிப்படைந்துள்ளது.

இனப்பிரச்னைக்குத் தீர்வு காணும் முகமாக அரசாங்கம் மாகாணசபை என்ற யோசனையை முன்வைத்தது. இளைஞர்களின அபிலாஷைகளையும் பூர்த்தி செய்யக்கூடியதாக இத்திட்டம் அமைந்துள்ளது. உத்தேச மாகாணசபை பெரும்பாலான சிங்கள மக்களின் நிலையையும் ஸ்திரப்படுத்தும். காணிக்குடியேற்றம், வேலைவாய்ப்பு என்பன தேசியரீதியில் இன விகிதாசாரஅடிப்படையில் வழங்கப்படும். [ஒ]

## வலி வடக்கில்——

# அபிவிருத்தி வேலைகள் விபரம் திரட்டப்படுகின்றது

மாவிட்டபுரம், திங்கள்

வலி- வடக்குப் பகுதியில் 1987ம் ஆண்டுக்கான பன்முக வரவு செலவுத்திட்ட நிதியில் செய்யப்படவேண்டிய அபிவிருத்தி வேலைகள் குறித்த விபரங்களை திரட்டுவதில் அபிவிருத்திச்சபை உப அலுவலகங்கள் ஈடுபட்டுள்ளன.

இவ்விபரங்களை இம்மாதம் 15ம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு யாழ். அரச அதிபர் கோரியதையடுத்து வலி- வடக்குப் பகுதியில் உள்ள தெல்லிப்பழை, காங்கேசன்துறை, மயிலிட்டி உப அலுவலகங்கள் அவற்றைத்திரட்டுவதில் ஈடுபட்டுள்ளன.

இது குறித்து உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களினால் ஆலோசனைக் கூட்டங்களும் ஏற்பாடு செய்யப்பட்டு அவற்றில் கலந்துகொண்ட பொது நல சேவா சங்கங்களிடமும் அபிவிருத்தி வேலைகள் பற்றிய விளக்கங்கள் கோரப்பட்டுள்ளன. (எ)

# கரடிப்போக்கு சந்தியில் தற்காலிக பஸ் நிலையம்

கிளிநொச்சி, திங்கள்

கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தி தற்காலிக பஸ் நிலையமாக மாற்றப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மக்கள் கரடிப்போக்குச் சந்திக்குவந்தே தமது பிரயாணங்களை மேற்கொள்கின்றனர். வ.பி.போ.ச. பஸ்களும், தனியார் பஸ்களும் கரடிப் போக்குச் சந்திக்கு வந்தே சகல இடங்களுக்கும் திரும்பிச் செல்கின்றன

இதேவேளை கிளிநொச்சி நகரம் தொடர்ந்து ஸ்தம்பித நிலையிலேயே உள்ளது. கரடிப்போக்கிலும் கடைகள் அனைத்தும் மூடப்பட்டேயுள்ளன. பிரயாணிகள் வசதியை முன்னிட்டு ஒரே ஒரு தேநீர்ச்சாலை மட்டும் கரடிப்போக்கில் புகையிரத நிலைய வீதிப்பக்கமாகத் திறக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் சன நடமாட்டம் வெகுவாகக் குறைந்திருக்கிறது. பாடசாலைகள் நகரத்தில் மூடப்பட்டுள்ளன. நகரில் அமைதி குடிகொண்டுள்ளது. அமைதியைக் குலைக்கும் குண்டுச் சத்தங்கள் இடையிடையே கேட்டவண்ணமிருக்கிறது.

## கடத்தப்பட்டவர் விடுதலை

மட்டக்களப்பு, திங்கள்,

மட்டக்களப்பில் கடந்த 2ம் திகதி கடத்தப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவர் திரு. சம்பந்தமூர்த்தியின் தந்தை திரு. சின்னத்தம்பி இன்று விடுதலை செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

மட்டுநகரில் கடந்த மாதம் 31ம் திகதி அமைச்சர் தேவா' கலந்துகொண்ட வைபவத்தில் பங்குபற்றிய திரு. சின்னத்தம்பி உட்படப் பலர் கடத்தப்பட்டதும் கடத்தப்பட்டோரில் ஒருவரான ஆசிரியர் சிவலிங்கம் கொல்லப்பட்டதும் தெரிந்ததே. (இ)

## ஷெல்' தாக்குதல்.,.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மரணமானார்.

யாழ். பதில் நீதவான் எ. அன்ரனி நேற்றுக்காலை மரண விசாரணை நடத்தினர்.

இறந்தவரின் தந்தை எம். சரவணமுத்து சாட்சியமளிக்கையில் தனது மகன் சம்பவ தினம் காலை வாழைப்பழக் கடைக்கு வழக்கம்போல்வேலைக்குச்சென்றாரென்றும் நண்பகல் ஆஸ்பத்திரி சிற்றூழியர் ஒருவர் வந்து மகனை ஷெல் தாக்கி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தாரென்றும் தான் ஆஸ்பத்திரிக்கு சென்று பார்த்ததாகவும் நள்ளிரவு அவர் மரணமானாரென்று கூறினர்.

பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது. [ச-இ]

## வடபகுதியில்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளார்.

இதேவேளை அண்மையில் யாழ். நகர் வந்திருந்த பி. பி. ஸி. செய்தியாளர் திரு. ஷம்ப்ரே ஹோக்ஸ்லி இத்தொழிற்சாலையைப் பற்றி தனது செய்திகட்டுரையொன்றில்குறிப்பிட்டிருந்தார். இத்தொழிற்சாலையில் நாளொன்றுக்கு 25 மோட்டர் ஷெல்களும் 100 கிறனேட்டுகளும் தயாரிக்கலாம் எனவும் திரு. ஹோக்ஸ்லி தனது செய்தியில் குறிப்பிட்டிருந்தார். (கூ-ஊ)

## வல்வையில்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் பல இராணுவத்தினர் காயமடைந்திருக்கலாம் எனவும் அச்செய்திப் பலகை தெரிவிக்கிறது.

முகாமுக்குத் திரும்பிய இராணுவத்தினர் அங்கிருந்து நாலா பக்கமும் 'ஷெல்'களை அடித்தனர் என்றும், இதனால் எட்டு வயதுச் சிறுவன் உட்பட மூவர் காயமடைந்து உடனடியாக ஆஸ்பத்திரிக்குக்கொண்டு செல்லப்பட்டனரென்றும்தெரிவிக்கப்படுகிறது. (இ)

## தற்காலிக இடமாற்றம் பெற்ற

# ஆஸ்பத்திரி ஊழியர்கள்

## மீண்டும் கிளிநொச்சிக்கு அழைப்பு

பண்டத்தரிப்பு, திங்கள்

கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையிலிருந்து அப்பகுதியில் நிலவிய பதற்றநிலை காரணமாக வேறு இடங்களுக்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டிருந்த மாவட்ட வைத்திய அதிகாரி உட்பட சுமார் 60 ஊழியர்களையும் மீண்டும் அங்குசென்று கடமையாற்ற விடுவிக்குமாறு சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவர்களை யாழ். பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் சுற்றறிக்கை யொன்றின் மூலம் கேட்டுள்ளார்,

கிளிநொச்சி இராணுவ இணைப்பு அதிகாரி திரு ஜே நமுனே தற்போது இப்பகுதியில் சுமூகநிலை ஏற்பட்டு வழமைக்குத் திரும்பியுள்ளதாகவும், வைத்திய வசதிகள் எதுவுமின்றி அங்குள்ள ஏழை நோயாளர்கள்கஷ்டப்படுவதாகவும் ஆகவே வைத்தியசாலை மீண்டும் செயற்படுவது அவசியம் என்றும் அனுப்பியிருந்த இக் கடிதத்தை குறிப்பிட்டு யாழ். பிரதேச சுகாதார சேவைப்பணிப்பாளர் இந்த சுற்றறிக்கையை அனுப்பி வைத்துள்ளார்.

இதேவேளை கிளிநொச்சியிலிருந்து தற்காலிகமாக வேறு இடங்களில் கடமையாற்றி வந்த ஆஸ்பத்திரி ஊழியர்களில் பலர் அங்கு சென்று கடமையாற்ற அச்சமடைந்த நிலையில் சுகவீன லீவில் நிற்பதாக அறியப்படுகின்றது. (இ)

## சட்டவிரோத மின்னிணைப்பு

சுழிபுரம், திங்கள்.

சட்டவிரோத மின்பாவனை செய்தவர்கள் இல்லங்களுக்குள் நள்ளிரவில் திடீரென புகுந்த இளைஞர்கள் அங்கு பாவிக்கப்பட்ட வயர், பல்ப், சுவிச் யாவற்றையும் அகற்றி எடுத்துச்சென்றனர்

சுமார் 25வீடுகளில் இப்படியாக பெரும்தொகையானமின் உபகரணங்கள் கைப்பற்றப்பட்டது இச்சம்பவம் சுழிபுரம் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இரவு எட்டுமணிமுதல் நள்ளிரவு மூன்றுமணிவரை மின் உபகரணங்கள் அகற்றும் வேலைகள் நடைபெற்றது (கி)

## 'படையினர் அலுவலகம்'

மாவிட்டபுரம், திங்கள்

காங்கேசன்துறைத் துறைமுகப் பகுதியில் படையினரின் அலுவலகமொன்று திறக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறைத் துறைமுகப் பகுதியில் கடந்த சில வாரங்களாகப் படையினர் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டு வருகின்றனர். துறைமுக நுழைவாயிலிலிருந்து துறைமுக மேடைவரை இடையிடையே சிறு சிறு அறைகள் அமைத்து ஏற்கனவே படையினர் தங்கிக் கடமைகளில் ஈடுபட்டுள்ளனர்.

தற்போது அவர்களது கடமைக்காக அலுவலகமொன்று திறக்கப்பட்டுள்ளது.

## பேச்சுக்கள்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தீவிரவாதிகள் என்ற பாகுபாடு இல்லை. நாங்கள் அனைவரும் ஒரு அமைப்பைச் சேர்ந்தவர்களே. அதேபோல் எங்கள் கருத்துகளும் ஒன்றாகவே இருக்கும்'' என்று கூறியஅவர் இலங்கைத் தமிழர்களின் வாழ்க்கைக்கும் பாதுகாப்புக்கும் தேவையான அடிப்படை முக்கியத்துவத்தை விட்டுக் கொடுக்காமல் தமிழர் விடுதலைக் கூட்டணி உண்மையாகவும். மனப்பூர்வமாகவும் அமைதியான பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வருவதாகவும் கூறினர்.

இந்த மாநாட்டை தொடக்கி வைத்த அகில பாரதிய வித்தியாதி பரிக்ஷத் துணைத் தலைவர் பேராசிரியர் பால் அத்தே உரையாற்றுகையில், ''இலங்கையின் ஸ்திரமற்ற நிலையால் இந்தியாவில் பாதுகாப்பு பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளதால் இந்தியா இப்பிரச்னையில் ஆக்கபூர்வமானதும் மிகஉறுதியானதுமான முயற்சிகளை எடுக்க வேண்டும் இலங்கை அரசு அமுல்படுத்தும் வரையில் இப்பிரச்னைக்கான எவ்வித தீர்வும் பூர்த்தியாகாது'' என்றூர்.

மாநாட்டுக்குத் தலைமை வகித்த பத்திரிகையாளர் திரு. கே.ஆர். மல்காளி உரையாற்றுகையில், ''இனப் பிரச்னை தீர்த்து வைப்பதில் இலங்கை தீவிரமாக இருக்குமேயானல் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளையும் அரசகருமமொழியாக பாவிக்க வேண்டும். அத்துடன் தமிழர் பகுதிகளுக்கு சுயாட்சிஅளிக்க வேண்டும்'' என்றூர்.

இம்மாநாட்டில் டாக்டர் வி. ராமமூர்த்தி. டாக்டர் கலாநிதி, பி. நெடுமாறன் உட்பட பலர் கலந்துகொண்டு உரையாற்றினர். [கி இ ஈ]

## மாங்குளம்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பின்னர் ஹெலிக்கொப்டரில் கொண்டு சென்றுள்ளதாகத் தெரிகிறது. அப்படிக்கொண்டு செல்லப்பட்டவர்களில் வயோதிபரும் அடங்குவார் இவர்களில் நான்குபேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் ஆயினும் மிகுதி ஆறுபேரின்நிலை என்னவென்று தெரியவில்லை

[ச-எ]

## எரிபொருள்....

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யில் தற்சமயம் செயற்படாமலிருக்கும் ரிபொருள் நிலையத்திற்குச் சென்ற ஊழியர்களே அங்குவந்த இளைஞர்களினல் அவற்றை எடுப்பதற்கு அனுமதிக்கடபடமாட்டாது எனக் கூறித் தடுக்கப்பட்டனராம். இதனல் ஊழியர்கள் திரும்பிச் சென்றனராம். [அ-இ]

## ''காயங்களுடன் தம்பி கிடந்தார்''

யாழ்ப்பாணம், செவ்:

'கோட்டைப்பக்கத்திலிருந்து வந்த ஷெல் வாழைப்பழச் சந்தைக்குள் விழுந்து வெடித்ததால் என்தம்பி பலத்த காயமடைந்து இரத்தவெள்ளத்தில் கிடந்தார். அவரை ஆஸ்பத்திரியில் அனுமதித்தபோது அங்கு மரணமானர் ''

ஏழாலையைச்சேர்ந்த க. ஞானலிங்கத்தின் மரணவிசாரணையில் சாட்சியமளித்த க. தர்மலிங்கம் இவ்வாறு கூறினர்.

யாழ் பதில் நீதவான் ஏ. அன்ரனி நேற்றுக்காலை மரண விசாரணை நடத்தினர்.

சம்பவதினம் நகர் வீதியால் சென்றபோது ஷெல் விழுந்து வெடித்த சத்தம்கேட்டு பாதுகாப்புத்தேடி ஓடியதாகவும், பின் பதற்றம் குறைந்தபோது தனது தம்பி காயமடைந்ததை அறிந்ததககவும் அவர் மேலும் கூறினர்.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணையை ஒத்திப்போடப்பட்டுள்ளது. [இ]


## கடைசிநேர வரிவிளம்பரம்

**விற்பனைக்கு**

Sony 20'' 2020, National வீடியோ டெக் N.V. 600EN,, 2000 EN S.T.L. வீடியோ கிளப், No: 3. நவீன சந்தை மேல்மாடி, திருநெல்வேலி சந்தி. (C 4020)

**லிடோ**

காலை 10-30, 2-30, 6-30

பாண்டியன் - ரேவதி நடித்த

**புதுமைப் பெண்**

[புதிய பிரதி கலர்]

அடுத்த படம்

GOLDEN DRAGON SILVER SNAKE

(Karate and Action Colour)

**வெலிங்டன்**

வெண்திரையில்

10-30, 2-30, 6-30

இனிய பாடல்கள் அதி பயங்கர சண்டைகள், தந்திர காட்சிகள், நகைச்சுவை நிறைந்த

சிவாஜி, ஜமுனு வீரப்பா, நம்பியார்

**தங்கமலை ரகசியம்**

[புத்தம் புதிய பிரதி] இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டது.

## அன்பான வேண்டுகோள்

எங்கள் குடும்பத் தலைவர் துன்னாலை தெற்கு ச. செந்தூராசா 10-08-86 ஞாயிறு யாழ்நகர் வந்தவிடத்தில் இனந்தெரியாதவர்களால் கொண்டுசெல்லப்பட்டுள்ளார் அவரை மீட்டுத்தருமாறு புனித இயக்கங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

அப்பா உங்களை பாசத்துடன் எதிர்பார்க்கின்றோம்.

இப்படிக்கு

பிள்ளைகள்: சுதன், சுபாஸ், சுவர்ணன்

மனைவி: பத்மா. [C-4029]

# "இனப்படுகொலைக்கு எதிராக நாம் போராடுவது இந்தியாவுக்கு தெரியும்"

## "நியூஸ் வீக்" சஞ்சிகைக்கு 'பிரபா' பேட்டி

(சென்னை)

"இந்தியா மனிதாபிமான அடிப்படையில் தனது மண்ணில் செயல்பட எம்மை அனுமதித்துள்ளது. இனப்படுகொலைக்கு எதிராக நாம் போராடுவது இந்தியாவுக்குத் தெரியும். எமக்கும் பஞ்சாப் நிலைக்கும் அடிப்படையில் வித்தியாசமுண்டு; பஞ்சாப்பில் இனப்படுகொலை செய்யப்படவில்லை."

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு வே. பிரபாகரன் ஒரு பேட்டியில் கூறியுள்ளார்.

ஆகஸ்ட் 11ம் திகதி 'நியூஸ் வீக்' சஞ்சிகையின் சதீப் மசூம்தார் என்ற செய்தியாளருக்கு திரு. பிரபாகரன் அளித்துள்ள அப் பேட்டியின் விபரம் வருமாறு:

கே: உங்களது இராணுவப் பிரிவினரால் அப்பாவிகள் கொலை செய்யப்படுவதாகச் சொல்லப்படுகின்றதே அது பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

ப: அதனை நான் மறுக்கின்றேன். அப்படியான செயல் எதனையும் தமிழீழ விடுதலைப் புலிகள் செய்வதில்லை நாங்கள் ஊர்காவல் படையினரைக் கொலைசெய்தது உண்மையே. அவர்கள் அப்பாவிப் பொதுமக்கள் இல்லை அவர்கள் இராணுவப் பயிற்சிபெற்றவர்கள்

கே: எத்தனைபேர் உங்கள் அமைப்பில் இருக்கிறார்கள்? அவர்கள் எங்கே பயிற்சி பெற்றார்கள்?

ப: அ ஒரு ரகசியம்! ஆனாலும் இலங்கை ராணுவத்தில் உள்ள 51 ஆயிரம் பேரைச் சமாளிக்கும் வல்லமை கொண்டவர்களாக இருக்கின்றோம்.

கே: தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மற்றைய குழுக்களிலிருந்து பிரிந்து முன்னணியில் இருப்பதன் காரணம் என்ன?

ப: ஒழுக்கமும் தேசிய உணர்ச்சியுமே இதற்கு முக்கியமான காரணம் எல்லாவற்றிற்கும் மேலாகத் தமிழ் மக்கள் என்பின்னால் நிற்பதும், இந்த முன்னணி நிலைக்குக் காரணம் எனலாம்.

கே: உங்களின் இராணுவ நடவடிக்கைக்காக நீங்கள் போதைப்பொருள் வியாபாரம் செய்வதாகச் சொல்லப்படுகிறதே... இதுபற்றி என்ன சொல்கின்றீர்கள்?

ப: தவறு! மக்கு எமது மக்கள் நிதி தருகின்றார்கள்! அதைக்கொண்டு நாம் சர்வதேச சந்தையில் ஆயுதங்கள் வாங்குகின்றோம். இதைவிட எதிரிகளிடமிருந்து ஆயுதங்களையும் வெடிமருந்துகளையும் நாம் கைப்பற்றுகின்றோம். நமது இயக்க அங்கத்வர்கள் மதுகூட அருந்துவது கிடையாது. இந்நிலையில் போதைவஸ்து வியாபாரம் செய்வதாக எப்படிச் சொல்லமுடியும்?

கே: நீங்கள் கியூபாவில் இராணுவப்பயிற்சி பெற்றதாகச் சொல்லப்படுகிறதே அதுபற்றி என்ன சொல்கிறீர்கள்?

ப: இல்லை... நான் எனது தனிப்பட்ட பயிற்சியின் மூலமே அதனைப் பெற்றுக் கொண்டேன். 'பிளன்ரி ஸ்ரூட்' அமெரிக்கப் படமும் எனக்கு இந்தப் பயிற்சிக்கு உதவி செய்தது.

கே; தமிழ் மிதவாதிகட்கும் அரசாங்கத்துக்குமிடையில் நடைபெறும் பேச்சுவார்த்தைகள்பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

ப, அரசாங்கத்தின் ஆலோசனைகள் பேச்சுவார்த்தை நடாத்தப் போதுமானவைகளாக இல்லை. அப்படிப்பேச்சுவார்த்தைகள் நடாத்தப்படுவதனால் 4 கொள்கைகள் அங்கீகரிக்கப்படவேண்டும் என்று நாம் கருதுகின்றோம்.

அவை; [1] தமிழினம் ஒரு தேசியஇனம் என அங்கீகரித்தல்.

[2] தமிழர்களின் பாரம்பரிய பிரதேசத்தை அங்கீகரித்தல்.

[3] தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளுதல்.

4] நாடற்ற தமிழர்களின் சிவில் உரிமையை அங்கீகரித்தல். ஆயினும் இவற்றில் எவையும் அங்கீகரிக்கப்படவில்லை. இப்போது நடக்கும் பேச்சுவார்த்தை ஜனாதிபதி ஜே. ஆர். உலகத்தை ஏமாற்றுவதற்காகப் பயன்படுத்துகிறார்.

கே: இந்தியா தனதுமண்ணில் உங்களைச் செயல்பட அனுமதி தந்திருக்கிறதே?

ப: இது மனிதாபிமான அடிப்படையுடன் சம்பந்தப்பட்டது இனப்படுகொலைக்கு எதிராக நாம் போராடுவது இந்தியாவுக்குத் தெரியும்!

கே: இந்தியாஉங்களை ஆதரிக்கின்றது. ஆனால் பாகிஸ்தானில் பயிற்றப்படும் சீக்கிய பிரிவினைவாதிகட்கு எதிராக இந்தியா பாகிஸ்தானைக் குற்றம் சாட்டுகிறதே?

ப: இதற்கு அடிப்படை வேறுபாடு இருக்கின்றது எமது மக்கள் இனப்படுகொலை செய்யப்படுகின்றார்கள். ஆனால் பஞ்சாப்பில் இந்தியா இனப்படுகொலையில் ஈடுபடவில்லை.

கே: இந்தியா பேச்சுவார்த்தை மூலம் தீர்வு வருவதை ஆதரிக்கின்றது. அதேநேரத்தில் தனிநாட்டுக் கோரிக்கையையும் எதிர்க்கின்றதே?

ப: உலகம் மாறுதல் அடைகின்றது. எனவே காலமே வரலாற்றை மாற்றுகின்றது இந்திய பலஸ்தீனிய விடுதலை இயக்கம் [PLO] நமீபிய விடுதலை இயக்கமான சுவாப்போ என்பவற்றை அங்கீகரித்துள்ளது அதுபோல எங்களையும் இந்தியா அங்கீகரிக்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

கே: சுதந்திரமான தமிழ்ப் பகுதிக்கு எந்தவிதமான அரசியலை விரும்புகின்றீர்கள்?

ப: சோசலிஷ அமைப்பையே விரும்புகின்றோம் ஆனால் அந்த சோசலிஷம் சீனாவையோ ரஷயாவையோ பின்பற்றுவதாக இல்லை. அது தனித்துவமான சோசலிஷம்

[கூ ஒள ஆ

## இடமாற்ற விண்ணப்பங்கள்

(பண்டத்தரிப்பு)

"நான்கு வருட காலத்திற்கு மேலாக யாழ் மாவட்டத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலும் கடமையாற்றிவரும் மலேரியா தடுப்பு இயக்க வெளிக்கள உதவியளர்கள் அனைவரும் தங்கள் இடமாற்ற விண்ணப்பங்களை எதிர்வரும் 15ம் திகதிக்கு முன்னர் தமது அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும்" என்று யாழ் பிரதேச மலேரியா தடுப்பு இயக்க வைத்திய அதிகாரி விடுத்துள்ள சுற்று நிருபமொன்றில் தெரிவித்துள்ளார். (இ)

## பதவி உயர்வு

பண்டத்தரிப்பு, திங்கள்.

பண்டத்தரிப்பு பகுதியில் கடந்த 17 வருடகாலமாக குடும்பநல சேவையாளராகக் கடமையாற்றிய திருமதி அழகம்மா முருகையா இம்மாதம் தொடக்கம் குடும்பல சேவையாளர் முதலாந்தரத்திற்குப் பதவி உயர்வுபெற்று கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார். (எ)

## லட்சார்ச்சனை

யாழ்ப்பாணம். செவ்வாய்,

நாரந்தனை வடக்கு தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கோவிலில் நேற்று திங்கட்கிழமை தொடக்கம் காலை மாலை லட்சார்ச்சனை நடைபெறுகின்றது. இறுதி நாளான 15ம் திகதி வெள்ளிக்கிழமை சதாசங்காபிஷேகமும் காலை சண்டி ஹோமமும், வரலக்ஷ்மி பூஜையும் நடைபெறும்.

## வருடாந்த உற்சவம்

(பண்டத்தரிப்பு)

பிரான்பற்று பெரியவளவு முருகமூர்த்திஆலய வருடாந்த உற்சவம் கடந்த 9ம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று எதிர்வரும் 18ம் திகதி தேர் உற்சவமும், மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளன. [எ]

## மாங்குளம் பொதுசன தொடர்பு அதிகாரி

யாழ்ப்பாணம்,செவ்

மாங்குளப் பிரதேசத்துக்குப் புதிதாக பொதுசனத் தொடர்பு அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு முன் இப்பகுதிக்குப் பாதுகாப்புப்படையில் உள்ள ஒருவர் பொதுசனத் தொடர்பு அதிகாரியாக இருக்கவில்லை எனத் தெரிகிறது. [ச- இ]

# 33 ஆண்டுகளுக்கு முன் நடந்த ஹர்த்தால் போராட்டம்

யாழ்ப்பாணம், செவ்.

"இலங்கையின் சரித்திரத்தில் 1953ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12ம்திகதி நடைபெற்ற மாபெரும் ஹர்த்தால் மக்கள் இதயங்களில் என்றென்றும் நிலைத்திருக்கும். அன்றைய யு என் பி அரசு மக்கள் விரோதநடவடிக்கைகளை மேற்கொண்டுவந்தது தனது வரவு செலவு திட்டத்தில் மக்கள் அனுபவித்து வந்த மானியங்கள் மீது கைவைக்கத்தொடங்கியது. அத்தியாவசியபொருட்களின் விலைகள் அதிகரித்ததனால் மக்கள் பலர் செய்வதறியாது திகைத்தனர் ஆனால் அன்றைய யு என் பி அரசு இதனை உணர முற்படவில்லை"

இவ்வாறு யாழ் கம்யூனிஸ்ட் கட்சி கிளை செயலாளர் திரு எஸ் விஜயானந்தன் 1953 ஆகஸ்டில் யு என் பி அரசின அன்றைய ஆட்சிக்கு எதிர்ப்பு தெரிவிக்குமுகமாக நடைபெற்ற அனைத்து மக்களின் ஒருமித்த சாத்வீக ஹர்த்தால் போராட்டத்தின் 33வதுவருட நிறைவையொட்டி விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

அன்றையஹர்த்தால்நடவடிக்கைக்கு இடதுசாரிகட்சிகளும் பொதுத்துறையிலும், தனியார் துறையிலும் ஸ்தாபன ரீதியாகஅணிதிரண்டதொழிற்சங்கங்களும் தலைமைதாங்கின இந்த மாபெரும் ஹர்த்தாலில் அகில இலங்கையிலுமுள்ள பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் சாதி, மத இன பேதமின்றி பங்குகொண்டனர்

ஆனல் யூ என். பி. அரசு தான் சர்வவல்லமை பொருந்திய உறுதியான அரசாகக் காட்டிக்கொண்டது. மக்கள் எழுச்சியை சர்வசாதாரணமாக அடக்கிவிடமுடியும் என நினைத்தது. ஆனல் நிலைமை அரசு எதிர்பார்த்ததற்கு மாறுகவே நடைபெற்றது.

நகரங்களிலும், கிராமங்களிலும் இருந்த உழைக்கும்மக்கள் அரசுக்கு எதிரான ஐக்கிய போராட்டத்தில் குதித்தனர். தனது சொந்தமக்களையே அரசு பல இன்னலுக்குள்ளாக்கியதுடன் அன்றைய ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதமராகவிருந்த திரு. டட்லி சேனநாயக்காவையே பதவியிலிருந்து ராஜினமாசெய்யவைத்தது.

இன்றைய யூ. என் பி அரசு அன்றைய யூ என் பி அரசைவிட வித்தியாசமானது என்று காட்டிக்கொண்டு 1977ம் ஆண்டு பதவிக்கு வந்தது. இருந்தும் என்ன தேசிய இனங்களுக்கிடையே உள்ள உறவுகள் என்றுமில்லாதவாறு மிகவும் மோசமான நிலையை அடைந்துள்ளது. இனப்பிரச்சகு நியாயமான அரசியல் தீர்வைக்காணும் முயற்சி பின் தள்ளப்படுவது அரசின் பொறுப்பின்மையை காட்டுகின்றது. தொழிற்சங்க உரிமைகள் யாவும் மறுக்கப்பட்டுள்ளன. 1980ம் ஆண்டில் சம்பள உயர்வுகோரி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட பல்லாயிரம் தொழிலாளர்கள் இன்றும்கூட நிர்க்கதியாக்கப்பட்டுள்ளனர், இளைஞர்களும் மாணவர்களும் சொல்லொணா துன்பதுயரங்களை அனுபவித்துக்கொண்டிருக்கின்றனர்.

1953ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடந்தேறிய மாபெரும் ஹர்த்தாலின் வெற்றி இன்று நாம் அனைவரும் அனுபவித்து வரும் துன்பதுயரங்களுக்கு முடிவுகட்ட எடுக்கவேண்டிய நடவடிக்கைக்குமுன்னுதாரணமாகத்திகழ்கின்றது. [சி]

## கல்லுண்டாயில் வண்டில்-வான் மோதல்

அராலி, திங்கள்

கல்லுண்டாய்வீதியில் வைரவ கோவிலுக்கு அருகாமையில் யாழ்ப்பாணத்திலிருந்து வந்து கொண்டிருந்த ஒற்றைத்திருக்கல் வண்டியும், யாழ்ப்பாணத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த மினிவானும் நேற்றுமுன்தினம் மோதிக் கொண்டதில் வண்டிஓட்டி வந்த க. கருணாகரன் என்பவர் காயமுற்றார். வண்டியும் வானும் விலத்தும்போது இந்த விபத்து ஏற்பட்டது. (ஆ)

## அங்குரார்ப்பணக் கூட்டம்

யாழ்ப்பாணம் செவ்வாய்

விவசாயத் திணைக்களத்தினதும் மிருகசுகாதார உற்பத்தி திணைக்களத்தினதும் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களின் அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் 16ம் திகதி சனிக்கிழமை காலை திருநெல்வேலி விவசாய பாடசாலை பண்ணையில் நடைபெறவுள்ளது.

இச்சங்கம் விவசாய அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு விவசாயதிட்டமிடல் பணிபுரிவோர்க்கும் கமத்தொழில், கால்நடை வளர்ப்பு முதலானவற்றில ஈடுபட்டுள்ள விவசாயிகள் மற்றும் ஸ்தாபனங்களுக்கும் விவசாய அபிவிருத்தி உற்பத்தி சம்பந்தமான அறிவுரைகள் வழங்க உத்தேசித்துள்ளது.

## பத்து அணிகள் பங்குகொள்ளும் கிரிக்கெட்போட்டி

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின் வெள்ளிவிழாவை ஒட்டி "ஷப்ரூ" வெற்றிக் கிண்ணத்துக்கான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்று யாழ் மாவட்ட கழக அணிகளுக்கிடையில் நடாத்தப்படவிருக்கிறது.

ஷப்ரூ யுனிக்கோ பினன்ஸ் லிமிட்டெட்டின் ஆதரவில் நடைபெறும் இந்தப் போட்டியின் ஆட்டங்கள் நொக்கவுட் அடிப்படையில் நடைபெறும்.

நொக்கவுட் அடிப்படையில் நடைபெறவிருக்கும் இப்போட்டியின ஆட்டங்கள் யாவும் எதிர்வரும் 17, 19, 24, 30, 31 ஆம் திகதிகளில் யாழ் சென்பற்றிக்ஸ் கல்லூரியின் ஆயர் தியாகுப்பிள்ளை அரங்கில் நடைபெறும்

யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக நீல அணி கோல்ட்அணி, யாழ் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழக நீலஅணி பிறவுண் அணி காங்கேசன் சீமேந்துக் கூட்டுத்தாபன விளையாட்டுக் கழக அணி மல்லாகம் கிராமபிவிருத்திச் சங்க விளையாட்டுக் கழக அணி, யாழ்ப்பாணம் ஜெனியன்ஸ் அணி யங் பட்ரீதியன் அணி, தெல்லிப்பழை கிருஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக்கழக அணி, கொக்குவில் மத்திய சனசன சமூக நிலைய விளையாட்டுக்கழக அணி ஆகிய பத்து அணிகள் இந்த சுற்றுப் போட்டியில் பங்குபற்றுகின்றன,

முதல் சுற்று ஆட்டங்களும் கால் இறுதி அரையிறுதி ஆட்டங்களும் 30 ஓவர்கள் அடிப்படையில் நடைபெறும்.

இறுதியாட்டம் 40 மட்டுப்டுததப்பட்ட ஓவர்களைக் கொண்டடிருக்கும்

வெற்றிபெற்ற அணிகளுக்கும் திறமையாக விளையாடும் வீரர்களுக்கும் பல பெறுமதிமிக்கப்பரிசுகளை வழங்க ஷப்ரூ நிறுவனம் முன்வந்துள்ளது; [எ]

# ‘சார்க்’ மகாநாடு நேற்று
# டாக்காவில் ஆரம்பம்

டாக்கா, ஆகஸ்ட் 11
தெற்காசிய நாடுகள் பிராந்திய ஒத்துழைப்புச் சங்கம் (சார்க்கின்) வெளியுறவுச் செயலாளர்கள் நிலையிலான நிரந்தரக் கமிட்டி மாநாடு இன்று டாக்காவில் ஆரம்பமாகியது.

சார்க் சங்கத்துக்கு என நிரந்தரமான செயலகம் அமைப்பது தொடர்பாக இம் மாநாட்டில் பரிசீலனைசெய்யப் படும்.

இந்தச் சங்கத்து உறுப்பு நாடுகளிடையே ஒருங்கிணைந்த திட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம்பற்றியும் இம் மநாட்டில்பரிசீலனை செய்யப் படும். பயங்கரவாதம் பற்றி இந்த அமைப்பின் ஆய்வுக் குழு தெரிவித்துள்ள பரிந் துரைகள் இந்த நிரந்தரக் கமிட்டியினால் ஏற்றுக்கொள் ளப்படுமென எதிர்பார்க்கப் படுகிறது.

நாளை டாக்காவில் ஆரம்பமாகும் சார்க் வெளியுறவு அமைச்சர்களின் இரண்டு நாள் மாநாட்டுக்கான தற்காலிக விடய ஆலோசனைப் பட்டியலை இந்த நிரந்தரக் கமிட்டி சமர்ப்பிக்கவுள்ளது. (சி)

### முன்னாள் ராணுவ தளபதி:
# ‘வைத்யா’ கடமைப்பற்றுடன்
## இந்தியாவுக்கு சேவையாற்றினார்
### — ராஜீவ்

புதுடில்லி, ஆகஸ்ட் 11
இந்திய ராணுவத்தின் முன்னாள் தளபதி ஜெனரல் அருண் வைத்யா நேற்று முன்தினம் கொல்லப்பட்டது குறித்து இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி ஆழ்ந்த அதிர்ச்சியும், கவலையும் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ராஜீவ் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், ‘‘மிகுந்த கடமைப்பற்றுடன் இந்தியாவிற்கு சேவைபுரிந்த தனிச்சிறப்பு வாய்ந்த வீர மிக்க ஒரு தீரர் ஜெனரல் வைத்யா, அவரது மறைவினால் ஏற்பட்டுள்ள இழப்பு நம் ஒவ்வொருவருக்கும் வேதனை தரக்கூடிய பெரும் துயரமாகும்’’ என்றார்.

ராணுவத் தளபதி கே. சுந்தர்ஜீ விடுத்துள்ள இரங்கற்செய்தியில் ‘‘கோழைத்தனமான இச்செயலை அனைவரும் கண்டிக்கவேண்டும் துணிச்சல் மிக்க வீர தீரர் இத்தகைய கோழைத்தனமான விதத்தில் கொலை செய்யப்பட்டதால் கொடுமையான இக்கொலைச் செயல் மேலும் பெருமளவுக்கு அதிர்ச்சியளிப்பதாய் உள்ளது’ எனக் கூறியுள்ளார்.

திரு வைத்யாவின் மறைவு குறித்து விமானப் படைத்தளபதியான ‘எயர் சீவ் மார்ஷல்’ வேலபாணட்ல், மனித ஆற்றல் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. வி. பி. நரசிம்மராவ் எரிசக்தித்துறை அமைச்சர் திரு. வசந் சாட்டேல், உள்நாட்டு பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. பி சிதம்பரம் ஆகியோரும் நாட்டின் பல மாநிலங்களின் முதலமைச்சர்கள், கவனர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள், பல அரசியல் கட்சித் தலைவர்கள் இக்கொலையைக் கண்டித்துள்ளனர்.

### முதல்வர் எம். ஜி. ஆர். இரங்கல் செய்தி

‘‘ஜெனரல் வைத்யா நாட்டுப்பற்றுக்கும் தைரியத்திற்கும் ஒரு சின்னமாக விளங்கினார். அவர் கொலைசெய்யப்பட்ட பயங்கரச்செயலை நாகரீக உலகம் முழுவதும் கண்டனம் செய்கிறது’’ என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம் ஜி ராமச்சந்திரன் தமது இரங்கல் செய்தியில் அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் வெளியிட்டுள்ளார்.

திரு வைத்யாவின் தலைப் பகுதியிலிருந்து இரண்டு குண்டுகள் எடுக்கப்பட்டதாகவும், திருமதி வைத்யாவின் உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் வைத்திய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இன்று நடைபெறும் இறுதிச்சடங்குகள் முழு ராணுவ மரியாதையுடன் நடக்கும் என்று ராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (சி-எ)

## உலகச் செய்திகள்

## ராஜீவ் பயணம் செய்த விமானத்தில் கோளாறு

பிராவ், ஆகஸ்ட் 11
இந்திய பிரதமர் திரு. ராஜிவ்காந்தி நேற்று காலை பிராவிலிருந்து புதுடில்லி செல்லும் பயணம் தாமதமானது

பிராவிலிருந்து இந்தியா புறப்பட்ட பிரதமர் ராஜீவ் பயணம் செய்த விமானம் புறப்பட்டு 1 மணி 20 நிமிடத்தின் பின் தீ எச்சரிக்கை சமிஞ்சை வெளியானதைத் தொடர்ந்து அவ் எஞ்சின் இயக்கத்தைநிறுத்தநேரிட்டது

அருகிலுள்ள மாஸ்கோ விமான நிலையத்தில் தரையிறங்குவதற்காக விமானம் சோவியத்யூனியன் திரும்பியது.

பின்னர் திரு. ராஜீவ்காந்தி மற்றொரு விமான மூலம மாஸ்கோவிலிருந்து நேற்று காலை இந்தியா புறப்பட்டார். (சி)

## அன்னையர் முன்னணி கண்டனம்

யாழ்ப்பாணம், செவ்
‘‘குழந்தையொன்றின் பிரசவத்தை நேரில் பார்த்த இராணுவ அதிகாரியின் இந்த அநாகரிகமான நடவடிக்கையும் இதற்கு அனுமதியளித்த வைத்தியரின் பொறுப்புணர்வின்மையும் மிகக் கண்டிக்கத்தக்கன.’’

இவ்வாறு அன்னையர் முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுளளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குழந்தையொன்றைப் பிரசவிப்பதை நேரில் பார்க்க வேண்டும் என்று விரும்பிய படை அதிகாரி ஒருவர் ஒரு வைத்தியசாலைக்குச் சென்றுள்ளார். அங்கு இராணுவர் சுற்றி நிற்க, அங்குள்ள வைத்தியர் ஒருவரின் சம்மதத்துடன் பிரசவ அறைக்குள் சென்று ஒரு பெண் பிரசவிப்பதைப் பார்த்துள்ளார்

பிரசவ வேதனையால் அவதிப்படும் ஒரு பெண்ணின் நிலையைப் பார்த்துத் திருப்திப்படுவது அந்த அதிகாரியின் காட்டுமிராண்டித்தனமான மனப்போக்கையே காட்டுகிறது.

பிரசவத் தாயின் மனோநிலையைச் சிறிதும் கவனத்தில் கொள்ளாது அனுமதியளித்த வைத்தியரும் மிகச் கண்டனத்துக்குரியவர். இச்சம்பவம் வைத்தியசாலையில் உள்ள பெண் நோயாளிகள், பெண் வைத்தியர்கள், பெண் ஊழியர்கள் ஆகியோரையும் அச்சுறுத்துவதாக அமைவதுடன் அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பதையும் காட்டுகிறது.

நிர்க்கதியான நோயாளிகள் தங்கியிருக்கும் வைத்தியசாலையில் இராணுவத்தினர் இத்தகைய அடாவடித்தனம் புரிந்தமை குறித்து தமிழ்ப் பகுதிகளில் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க முயல்வதாசப் பறைசாற்றும் அரசு உடனடியாக விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### முன்னணியின் நல்லூர்க் கிளை

‘புலிக்குட்டி’ ஜனனமாவதைப் பார்க்க விருப்பிய இராணுவ உயர் அதிகாரியின் விருப்பம் ஈடேறியதுபற்றிய செய்திக்கு நல்லூர்அன்னையர் முன்னணியினர் பலத்த கண்டனம் தெரிவிக்கின்றனர். வைத்தியசாலையில் பிரசவம் நடைபெறும்போது பிரசவிக்கும் பெண்ணின் கணவரையோ உறவினரையோகூட அனுமதிக்காதபோது உயர் இராணுவ அதிகாரிக்கு இத்தகைய சலுகை வழங்கியது தவறானதே.’’

## இந்தியா வெற்றி

புதுடில்லி. ஆகஸ்ட் 11
ஆறு நாடுகளுக்கிடையிலான சர்வதேச கைப்பந்தாட்டப் போட்டியில் இந்தியா வெற்றி பெற்றுள்ளது,

நேற்று ஹைதராபாத்தில் நடைபெற்ற போட்டியில் இந்தியக்குழு சோவியத் யூனியனை 15—9. 15—8. 15–9 என்ற புள்ளி வித்தியாசத்தில் தோற்கடித்தது.

இந்திய குழு விளையாடிய எல்லாப் போட்டியிலும் வெற்றி பெற்றமைகுறிப்பிடத்தக்கது [சி]

## இன்றைய பலன்

மாதம்- ஆடி
திகதி- 27 (1986-8-12)
கிழமை- செவ்வாய்
திதி- ஸப்தமி மு.இ. வரை
நக்ஷத்திரம்- சுவாதி
மு. இ. வரை

மேடம்- வாழ்வுப் பயணத்தில் இன்று வளமான திருப்பம் ஏற்படும். இலட்சியவாதிகள் பூரிப்படைவார்கள். குதூகலமான தினம்.

இடபம்- வாழ்க்கை ஒரு சுமையாகத் தோன்றக்கூடும். கடன்தொல்லைகள் அதிகரிக்கும். நண்பர் ஒருவர் காலை வாரிவிடுவர்.

மிதுனம்- தரும காரியங்களில் தாராளமாக ஈடுபடுவீர்கள். சுற்றுடலில் மதிப்பு உயரும். புண்ணிய ஸ்தலயாத்திரையொன்றும் மேற்கொள்ளப்படலாம்.

கடகம்- உற்சாகமாக நாளை ஆரம்பிப்பீர்கள். தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு வெளியூர் செய்தியும் கிடைக்கும்.

சிங்கம்- வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு பல வழிகளிலும் செயற்படுவீர்கள். எதிர்பாராத வரவுக்கும் இடமுண்டு

கன்னி- வணிகர்கள் இன்று அதிக முதலீட்டைத் தவிர்க்கவும். வீணான சிந்தனைகளினால் வேதனைப்படுவீர்கள். உடல் நலமும் குன்றும்.

துலாம்- மனப்போராட்டம் அதிகரிக்கும். உறவினர் ஒருவர்மீது ஆத்திரம் பிறக்கும். இதன்மூலம் கைகலப்பும் ஏற்படலாம்.

விருச்சிகம்: சமயோசிதமான நடவடிக்கையின்மூலம் எதையும் சமாளித்துக் கொள்வீர்கள். இல்லத்தில் அமைதி நிலவும். இலாபமுமுண்டு.

தனுசு- பொறுமையின்நிழல் உங்களைத் தொடரும். உதவி செய்யப்போய் உபத்திரவத்தைத் தேடிக் கொள்வீர்கள். சிந்தித்துச் செயற்படவும்.

மகரம்- மதவழி நடப்பின் மற்றவர்கள் பெருமைப்படுமலவிற்கு முன்னேற்றமுண்டு. அறிஞர்களின் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும்.

கும்பம்- வரவில் மந்தநிலை தென்படும். புதிய முயற்சிகளில் ஈடுபட விரும்புவீர்கள். புத்திரவழியால் புதினமுமுண்டு.

மீனம்- ஆமை வேகத்தில் காரியங்கள் நடைபெறும். பகைவர்களின் சூழ்ச்சி பலமாக இருக்கும். இடைக்காலப் பிரிவுக்கும் இடமுண்டு.

திருமலை
வே. ரவீந்திரன்

## நீதிபதி கைலாசம் காலமானார்

சென்னை, ஆகஸ்ட் 11
சென்னை உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதியும், சுப்ரீம கோர்ட்டின் முன்னாள் நீதிபதியுமான திரு. பி. எஸ். கைலாசம் தமது 70-வது வயதில் சென்னையில் நேற்றிரவு மாரடைப்பால் காலமானார்.

திரு. கைலாசம் சிகிச்சைக்கெனச் சென்ற மாதம் அமெரிக்கா சென்றிருந்தார்.

தமிழ்நாடு முதல்மைச்சர் திரு. எம். ஜி ராமச்சந்திரன் நீதிபதி கைலாசத்தின் மரணம் குறித்து இரங்கல்செய்தி ஒன்றை அனுப்பிவைத்துள்ளார். (சி)

### அமரர் ஜெயம்
# பாட்டாளி வர்க்கத்தின் தொண்டனாக வாழ்ந்தார்

வல்வெட்டித்துறை, திங்.
‘‘கடந்த காலங்களின் சாதித்தகர்ப்புக் காவலன் அமரர் ஜெயம்தான் என்பதை அன்றைய தலைமுறையினர் முதற்கொண்டு இன்றைய முற்போக்குவாதிகள்வரை யாவரும்மறுக்கவோ, மறைக்கவோ முடியாது சங்கங்கள் என்ற ஸ்தாபனங்களை அமைக்க முன்னின்று உழைத்த முற்போக்காளர் மட்டுமல்ல ஸ்தாபகரும் அவரே.’’

இவ்வாறு வடபகுதி இடதுசாரி இயக்கத்தின் முன்னோடியான அமரர் செ தர்மகுலசிங்கம் (ஜெயம்) நினைவுதினத்தையும், 1953ம் ஆண்டு ஹர்த்தால் ஞாபக தினத்தையும் நினைவுகூருமுகமாக தேவரையாளி இந்துக்கல்லூரி அருகாமையிலுள்ள மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்துக்குத் தலைமை தாங்கிப் பேசிய திரு சி. மாசிலாமணி குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தமது உரையில்,’’ அமரர் ‘ஜெயம்’ அன்று நினைத்திருந்தால் சிங்களத் தோளர்களின் நட்பு மூலம் அவர் ஒரு நியமன எம். பி யாகவோ அல்லது ஒரு மந்திரியாகவோவந்திருக்க முடியும். செல்வந்த பரம்பரையில் பிறந்து, செல்வந்தனாக இருந்தபோதிலும், ஒரு பாட்டாளியாக, பாட்டாளி வர்க்கத்தின் தொண்டனாகவே வாழ்ந்துகாட்டினார். அப்படியே மடிந்தும். இன்று பாட்டாளிகளின் நினைவில் அழியாப் புகழ்பெற்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்’’ என்றார்.

திரு த. சிதம்பரப்பிள்ளை அமரர் தர்மகுலசிங்கத்தின்சிறந்தபண்பினை, அரசியல் ஞானத்தை ஏழைகளுக்காக இரங்கும் சிந்தையை பாராட்டிப் பேசுகையில்; ‘‘சிறுபான்மை மக்களின் விடுதலைப் போராட்டங்களுக்காக வாழ்ந்த தியாகச் செம்பல் செ. தர்மகுலசிங்கம் உண்மையான சோஷலிஸவாதியாக உழைத்த அவர் பல போராட்டங்களைக் கண்டு அரச காவல் துறையினரின் பொல்லடி கல்லடிக்கும் ஆளானார்.

‘ஆனல் இன்றைய சோஷலிஸவாதிகள் தங்களால் போராடிப் பெறமுடியாதவற்றை இளம் சந்ததியினர் ஆயுதம் ஏந்திப் போராடி வெற்றிக்கம்பத்தை எட்டும் நிலையில் அரசாங்கம் காட்டும் பூச்சாண்டி பேச்சுவார்த்தை ஒப்பந்தங்களை நம்பி, இளைஞர்களை ஆயுதங்களைக் கீழேபோட வேண்டும் என வேண்டுகோள் விடுகின்றனர். இது வேதனைப் படவேண்டிய விஷயமே. எமது விடுதலை வீரர்கள் விடுதலைப் பாதையில் தொடர்ந்தும் விடுதலையை நோக்கி ஆயுதங்களுடன் நிமிர்ந்து வீறுநடை வெற்றிநடைபோடவேண்டும்’ என்றார். தோழர்கள் மு. ஏரம்பமூர்த்தி, க. தங்கவடிவேல், வ.மகாலிங்கம், பொன். குமாரசாமி மற்றும் பலரும் கலந்துகொண்டு உரையாற்றினர். அமரர் செ. தர்மகுலசிங்கம் அவர்களின் சிரேஷ்ட புதல்வி கமலாசினி தர்மரத்தினம் கூட்டத்திற்கு சமுகமளித்து தமது நன்றியினையும் தெரிவித்துக்கொண்டார். (இ)

## பேச்சுப் போட்டி

யாழ்ப்பாணம், திங்கள்
அடுத்த மாதம் 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரமத்தின்ஆதரவில் பேச்சுப்போட்டி நடைபெறவுள்ளது. கொக்குவில் இந்துக்கல்லூரியில் இப் பேச்சுப் போட்டி இடம் பெறும். (அ)

## யாழ். அரச அதிபரிடம்:

# அகதிகளுக்கு உதவுமாறு கோரும் தீர்மானம்

பண்டத்தரிப்பு திங்கள் கிளிநொச்சி, பரந்தன் ஆகிய பகுதிகளிலிருந்து அகதிகளாகி வெளியேறி வலி-தென்மேற்கு பகுதியிலுள்ள தங்கள் உறவினர்களின் இல்லங்களில் தஞ்சமடைந்திருக்கும் மக்களுக்கு நிவாரண உதவிகள் உடனடியாக வழங்கப்படவேண்டும் என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபரை கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்று யாழ் அபிவிருத்திச் சபையின் பண்டத்தரிப்பு கிராம உப அலுவலக பகுதியிலுள்ள சன சமூகநிலைய ஒன்றியத்தினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி ஒன்றியத்தின் அங்குரார்ப்பணப் பொதுக் கூட்டம் வலி தென் மேற்கு உதவி அரசாங்க அதிபர்பிரிவு சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் கிராம உப அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாதகல், இளவாலை, சிறுவிளான், மாகியப்பிட்டி, முள்ளானை ஆகிய இடங்களிலுள்ள சன சமூக நிலையங்களின்பிரதிநிதிகள் கலந்து சொண்டனர். ஒன்றியத் தலைவராக முள்ளானை கலைவாணி சனசமூக நிலையத் தலைவர் வ. செகராசசிங்கமும். உபதலைவராக மாகியப்பிட்டி சூரியோதய சனசமூக நிலையத்தை சேர்ந்த யோககுணராசாவும், செயலாளராக மாதகல் விபுலானந்தர் படிப்பகத்தின் செயலாளர் ச. வல்லிபுரமும்ஏகமனதாக தெரிவாகினா.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட இதர முக்கிய தீர்மானங்கள் பின்வருமாறு:

''பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலைக்கு சமீபத்திலுள்ள கிராமசபையின் பொது விளையாட்டு மைதானம் பற்றைகள் நிறைந்து சீர் கெட்ட நிலையில் இருந்துவருகின்றது அத்துடன் இந்தமைதானத்தின் ஒருபகுதி பாடுவெட்டும் நிலையமாகவும் இருந்து வருகின்றது இதனால் துர்நாற்றம் வீசுவதோடு சுகாதாரத்திற்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஆகவே மாடு வெட்டும் நிலையத்தை இங்கிருந்து வேறிடத்திற்கு உடனடியாக மாற்றவேண்டும்.

''இப்பகுதியிலுள்ள மயானங்கள் தகுந்த பராமரிப்புஎதுவுமின்றி மக்கள் பாவனைக்கு சீர்கெட்ட நிலையில் இருப்பதால் இவைகளை சீர்திருத்த நடவடிக்கை மேற்கொள்ளப் படவேண்டும்

''இப்பகுதியிலுள்ள ஒழுங்கைகள், வீதிகள் தகுந்த திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாததினால் மக்கள்பாவனைக்கு சீர்கெட்ட நிலையில் இருந்துவருகின்றன. இவற்றை புனரமைக்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட வேண்டும்.

சனசமூக நிலையங்கள் நடாத்திவரும் சிறுவர் பாடசாலைகளுக்கு நிதி உதவி வழங்கப் பட வேண்டும்.'' (எ)

## திருமலையில் 90,000 ஏக்கரில் நெற்செய்கை

திருமலை, திங்கள்

திருகோணமலை மாவட்டத்தில் எதிர்வரும் காலபோகத்தில் சுமார் 90 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இப்பயிர்ச்செய்கைக்குக் கந்தளாய், மகாவலி திட்டத்திலிருந்து நீர் விநியோகிக்கப்படுவதுடன் மேலும் தற்காலிக அணைகள் மூலமும் இப்பகுதிகளுக்கு நீர் விநியோகிக்க நீர் விநியோக திணைக்களம் நடவடிக்கைகளைமேற்கொள்ளவுள்ளது. [சி-கு]

## உப தபால் அதிபர் பதவி

சுழிபுரம், திங்கள்

மூளாய் உப தபால் நிலையத்திற்கு புதிய உபதபால் அதிபர் ஒருவரை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் வடபகுதி தபால் அத்தியட்சகரினால் கோரப்பட்டுள்ளது

விண்ணப்பம் செய்பவர்களுக்குரிய தகைமைகள் கொண்ட சுற்றுநிருபம் இப்பகுதியிலுள்ள பொது இடங்களில் வைக்கப்பட்டுள்ளது. [சி]

## புதிய நிர்வாகிகள்

சாவகச்சேரி, திங்கள்

யாழ். வெளிவாரிப்பட்டப் படிப்பு மாணவர் சழகத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர் திரு. ஆர். சதீஸ்வரன், தலைவர் திரு. கே. வாமதேவன். உபதலைவர் செல்வி ரீ. சிவாம்பிகை, செயலாளர் திரு. என். சுகுணன் உபசெயலாளர் செல்வி எஸ் குமுதினி, பொருளாளர்திரு வி. சிவராஜா, பத்திராதிபர் திரு. ரீ. மதிவதனன், உப பத்திராதிபர் செல்வி. பி வாசுகி. மற்றும் 11 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது. (ஊ-இ)

## அறவழி பிரார்த்தனைக் கழகங்கள்

சாவகச்சேரி, திங்கள்

கிராமிய மக்கள் மத்தியில் பிரார்த்தனையின் முக்கியத்துவத்தையும், அவசியத்தையும் வலியுறுத்தித்துன்பப்படுகின்ற மக்களுக்கு பிரார்த்தனைகள் மூலம் மன அமைதியையும் மகிழ்வினையும் கிடைக்கச் செய்ய உதவியாக அறவழிப் போராட்டக் குழுவினர் 'அறவழி' பிரார்த்தனைக் கழகங்களைக் கிராமங்களில் அமைக்கத் தீர்மானித்துள்ளனர்.

இவ்வாறான பிரார்த்தனைக் கழகங்களை முதலில், குழுவின் பாலர் பாடசாலைகள் நடைபெறும் கிராமங்களில் அங்குரார்ப்பணம் செய்யவும் பின்னர் படிப்படியாக ஏனைய பகுதிகளில் இக்கழகங்களை அமைக்கவும் ஏற்பாடு செய்கின்றனர்.

சமயசார்பற்ற பிரார்த்தனைகள் பற்றிய துண்டுப்பிரசுரங்களையும் அவர்கள் அச்சிட்டு மக்கள் மத்தியில் விநியோகம் செய்யவுள்ளனர். (இ)

## அறுவடை வயல் விழா

வட்டுக்கோட்டை திங்கள்

விவசாயப் பயிர்களின் முன்மாதிரி பரீட்சார்த்த துண்டங்களின் அறுடை வயல் விழா சங்கானை கிழக்கு தொட்டிலடியில் விவசாயிகள் குழு பொதுச் செயலாளர் திரு. க. வீரசிங்கம் அவர்களின் கமத்தில் இன்று (12-ம் திகதி) காலை பத்து மணிக்குவிவசாய போதனாசிரியர் திரு ச. தம்பிராஜா தலைமையில் நடைபெறும்

மேற்படி விழாவில் யாழ் கமநல சேவைத் திணைக்கள சிரேஷ்ட உதவி ஆணையாளர் திரு க பரமலிங்கம், யாழ். விவசாயத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு ச கிருஷ்ண பிள்ளை, பேராசிரியர் திரு கா சதாசிவம்பிள்ளை, தொழிலதிபர் திரு. க கனகராஜா, பெரும்பாக உத்தியோகத்தர் திரு பி சூசைப்பிள்ளை, விவசாய விஸ்தரிப்பு அலுவலர் திரு வை. பாலகிருஷ்ணன், பயிர்ச்செய்கை உத்தியோகத்தா திரு. ஜீ சிதம்பரநாதன் மற்றும் பலரும் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள்.

## தெரிவு

[யாழ்ப்பாணம்]

மன்னார் மாவட்டக் கல்லூரிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட மாவட்ட கிரிக்கட் போட்டியில் விடத்தல்தீவு அலிகார் மகாவித்தியாலயம் 4வது தடவையாகவும் அகில இலங்கை ரீதியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது. (சி-இ)

# மாணவர் பேரவையின் 'அம்புலன்ஸ்' சேவை

(யாழ்ப்பாணம்]

''தமிழ்பேசும் மக்கள் தமது சொந்தமண்ணில் போர் சூழலில் வாழ்ந்துகொண்டிருக்கும் வேளையில் இம்மாதிரியானமுதலுதவிச் சிகிச்சைப்பிரிவு மிக அவசியமானது.''

இவ்வாறு, தமிழீழ மாணவர்பேரவை (ரெஸோ) யாழ்ப்பாணம் பழையபூங்கா வீதியில் புதிதாக அமைந்துள்ள முதலுதவிச் சிகிச்சைப் பிரிவை ஆரம்பித்துவைக்கும் வைபவத்தில் உரையாற்றிய அவ்வமைப்பின் பிரமுகர் திரு. தமிழ் தெரிவித்தார். இவ்வைபவத்திற்கு யாழ். நகரசபை ஆணையாளர், திரு. சீ. வி. கே. சிவஞானம், டாக்டர் ஏ. பிலிப் உட்பட பல நிறுவனங்களின் பிரதி நிதிகளும்வந்திருந்தனர்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், ''எமது மாணவர்களுக்கு இன்றைய சூழலில் கற்பிக்கப்படும் கல்வி முதலாளித்துவ அமைப்பைக் கொண்டது இக்கல்வியை நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அதனைக் கற்கவேண்டியிருக்கிறோம். இந்தப் பணியில் ரியூஷன் முறையும் எமது மாணவர்களின் ஓய்வைக்கூட மழுங்கடித்து எமது மண்ணைப்பற்றி சிந்திக்கவைக்க முடியாமல் செய்துவிடுகிறது.

''இந்த முதலுதவி அமைப்பின் மூலம் மாணவர்கள் தமது ஓய்வுநேரங்களில் முதலுதவிக் கல்வியைப் பெற்று அக்கல்வியை எமது மக்களுக்குப் பயன்படுத்த வாய்ப்பு ஏற்படுகிறது'' என்றார்.

புதிய முதலுதவிச் சிகிச்சைப் பிரிவுக்கான அம்புலன்ஸ் வண்டியை டாக்டர்ஏ. பிலிப் இயக்கி ஆரம்பித்துவைத்தார். (கை-ஆ)


## பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க் கனடா

நேரடிப் பிரயாணம் உடனுக்குடன் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

சவூதி குவைற் அபுதாபி

ஆகிய இடங்களில் வருமான வாய்ப்புகளுக்கான ஒழுங்குகள் உடன் செய்து கொடுக்கப்படும்.

Passport, Bond

முதலியனவும் செய்துகொடுக்கப்படும்.

GROUP ATLANTIC

163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

[அடைக்கலமாதா கோவிலுக்கு முன்பாக]

A 1035



## பிரயாண ஒழுங்குகள்

கனடா

சவுதி அரேபியா

ஈராக்

[1] கனடா செல்ல விரும்புவோருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். எமது முகவர் உங்களை கனடாவிற்கு நேரடியாக அழைத்துச்செல்வார். செல்ல விரும்புவோர் 17ந் திகதிக்குப் பிந்தாமல் தொடர்புகொள்ளவும்.

[2] சவுதி அரேபியாவுக்கு விவசாய தொழிலாளர் (Labour) வேலைக்குச் செல்ல விரும்புவோர் 19ந் திகதிக்குப் பிந்தாமல் பாஸ்போட், 6 படங்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

[3] ஈராக் நாட்டில் (Hospital cleaners) ஆஸ்பத்திரி கிளினர்ஸ் ஆகச் செல்ல விரும்புவோருக்கு மிகவிரைவில் ஒழுங்குகள் செய்து தரப்படும். செல்ல விரும்புவோர் பாஸ்போட்டுடனும், 6படங்களுடனும் தொடர்பு கொள்ளவும்.

பாஸ்போட், பொண்ட், ஆகியனவும் செய்து தரப்படும்.

தொடர்பு:

N. BALA

பஸ் வழி இல: 764, பலாலி வீதி கோண்டாவில்.

திருச்செல்வம் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். [C3988]



## தேவை

பன்முகப்படுத்தப்பட்ட சேவைகளில் முன்னோடிகளான

"சமுத்திரா மல்ரி சேவிஸ்"

ஸ்தாபனத்தாரின்

கிளை நிறுவனங்களைச் சூழ்ந்த பிரதேசங்களிற்கு முகவர்கள் (AGENTS) தேவை.

விபரங்கட்கு கிளை நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

1. முருகமூர்த்தி லேன், நெல்லியடி, கரவெட்டி.
2. கே கே. எஸ் றேட். தெல்லிப்பளை.
3. கண்டி வீதி, சாவகச்சேரி.
4 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
5. காரைநகர் வீதி, மானிப்பாய்.
6. வங்களாவடி, வேலணை.

தலைமைச் செயலகம்:

சமுத்திரா மல்ரி சேவிசஸ்

303, பலாலி வீதி, கோண்டாவில்.

சிறு கைத்தொழில் உற்பத்தியாளர்களே உங்கள் உற்பத்திப் பொருட்களை எமது கிளை நிறுவனங்கள் முகவர்கள் மூலம் விரைவாகவிற்றுத் தருவதற்கு உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

உடன் விற்பனைக்குண்டு

1. BELLING COMPACT AUTO DE LUXE MODEL 430 T COOKER 4 BURNER
2. VACUUM CLEANER NATIONAL MODEL MC 6060 C.

எமது காரியாலயத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

3. வாகனங்கள், T. V. டெக், மின்சார உபகரணங்கள் வாங்குவோர் விற்போர் மற்றும் தங்களிடமுள்ள மேலதிகமான பாவனைக்குகந்த பொருட்கள் விற்பனைக்குள்ளோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும். (A 1040)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

செவ்வாய்க்கிழமை 12-8-86

நாட்டின் இரண்டாவது பெரிய

# விமான நிலையம், துறைமுகம் உள்ளதாக திருமலை அபிவிருத்தி செய்யப்படும்

## — அரசு தீர்மானம்

கொழும்பு, திங்கள்
நாட்டின் இரண்டாவது சர்வதேச விமான நிலையமும் துறைமுகமும் அடங்கிய பிரதேசமுமாக திருமலையை பல கோடிரூபா செலவில் அபிவிருத்தி செய்ய அரசு தீர்மானித்துள்ளதாக தெரிய வருகிறது.

இதற்கான உதவியை சில வெளிநாடுகளிடமிருந்து அரசு கோரியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சீனன்குடா இராணுவ விமானப்படைத்தளங்களைச் சுற்றியுள்ள பிரதேசங்களே அபிவிருத்தி செய்யப்படும். இத்திட்டத்திற்கான நில அளவை வேலைகள் பூர்த்தியடைந்து விடடன. இதற்கு தேவையான காணிகள் இப்போதே பெறப்படும்.

தீவிரவாதப்பிரச்னை அதிகரித்து வருவதால் காலியை இரண்டாவது பெரிய துறைமுகமாக்க துறைமுக அதிகாரிகள் விரும்பிய போதிலும் ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன திருமலை அபிவிருத்தியையே ஆதரிப்பதாகத் தெரியவருகிறது.

இதேவேளை திருகோணமலை கொழும்பு நெடுஞ்சாலையொன்று நீண்ட காலத்திட்ட அடிப்படையில் நிர்மாணம் செய்யப்படவுள்ளது [ஒ-கூ)

## புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், செவ்.
வவனியா ஈச்சங்குளம், காக்கையன்குளம் ஆகிய பகுதிகளில் கடந்த மாதம் 30ம்திகதி தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடம்பெற்ற நேரடி மோதலின் பின் அண்மையில் அப்பகுதியில் தாம் தேடுதல் நடத்திய போது இராணுவத்தினர் பயன் படுத்திய தானியங்கித் துப்பாக்கிகளும், ரவைக் கூடுகளும் ரவைகளும் தப்மால் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று விடுத்துள்ள அறிக்கையொன்றில்தெரிவித்துள்ளனர். [ஒ-இ]

## விண்ணப்பப் படிவம் தட்டுப்பாடு

சுண்டுக்குளி திங்கள்
யாழ் பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலகத்தில் பிறப்பு இறப்பு அத்தாட்சிப் பத்திரங்களைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பப் படிவங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (க)

# 25 குடும்பங்களுக்கு தையல் மெஷின் அன்பளிப்பு

சுண்டுக்குளி, திங்.
யாழ். மாவட்டத்தில் அண்மைக் காலங்களில் இடம் பெற்ற 'ஷெல்' தாக்குதலினலும், 'ஹெலி' குண்டு வீச்சினலும் துப்பாக்கிச் சூட்டினலும் தமது குடும்பத் தலைவர்களை இழந்த சுமார் 25 குடும்பங்களுக்கு யாழ் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நேற்றுத் தையல் மெஷின்கள் வழங்கப்பட்டன.

அகதிகள் புனர் வாழ்வு நிதியத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இவ் வைபவத்திற்கு யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் தலைமை வகித்தார் ஆஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் மூலம் அகதிகள் புனர் வாழ்வு நிதியத்தினரிடம் கையளிக்கப்பட்ட புத்தம் புதிய தையல் மெஷின்களையும் உபகரணங்களையும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் யாழ். அரசாங்க அதிபர் வழங்கினர் இவற்றுடன் போக்குவரத்துச் செலவுக்காக நூறு ரூபாய் முதல் நூற்றியம்பது ரூபாய் பணமும் இவர்களுக்கு வழங்கப்பட்டது. இக்குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட பொருட்களின் பெறுமதி சுமார் 4.000 ரூபாய் என மதிப்பிடப்பட்டது.

நேற்றைய இவ் வைபவத்தில் யாழ். திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு. எஸ். சிவதாசன், யாழ் தேர்தல் பிரதி ஆணையாளர் திரு எஸ். தர்மபாலன், திரு பி எல். பற்றிக் ஆகியோரும் கலந்து சொண்டனர். [இ]

## பொதிகள் கையேற்கப்படும்

கொழும்பு, திங்கள்
ரயில்வே திணைக்களம் குறிப்பிட்ட சில பொதிகளை இன்றிலிருந்து கையேற்பதெனத் தீர்மானித்துள்ளது. இதன்படி மலர்கள், பழவகைகள, காய்கறிவகைகள், சுகாதார திணைக்களத்திஞல் ஒப்படைக்கப்பட்ட மருந்து வகைகள், ஒக்ஸிஜன் சிலிண்டர் ஆகியபொருட்கள் கையேற்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜூன் மாதம் 2ம் திகதி வியாங்கொடையில் சரக்கு வண்டியொன்றில் ஏற்பட்ட குண்டுவெடிப்பையடுத்து ரயில்களில் பொதிகள் கொண்டு செல்வதைத் திணைக்களம் நிறுத்தியிருந்தது தெரிந்ததே

# 'மாகாண சபையினுல் நாடு முழுவதும் தமிழ்ராஜ்யமாகும்'

கொழும்பு. திங்கள்
''வரலாற்றுக் காலந் தொட்டு இந்த நாட்டில் சிங்கள இராஜ்யங்களே இருந்து வந்துள்ளன. எனவே மாகாண சபை யோசனைகள் அமுல் படுத்தப்பட்டால் வடக்குக் கிழக்கு மலையகம் ஆகிய மூன்று பகுதிகளிலும் ஒரு தமிழ் ராஜ்யம் ஏற்படும்'' என்று மல்வத்மூத அனுநாயக்க தேரரான ரம்புகல சோவிததேரோ கூறினுர்

கண்டி கெட்டகம்பை விகாரையில் மாகாணசபை யோசனைகளை எதிர்த்து பௌத்வ தேரர்கள் நடாத்திய கூட்டத்தில் பேசுகையிலேயே இவ்வாறு கூறினுர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: அரசின் புதிய யோசினைகள் அமுல் யடுத்தப் பட்டால் முழுநாடும் தமிழ் ராஜ்யமாக மாறும். ஆகவே அனைத்து மக்களும் ஒன்றிணைந்து இதனைப் பலமாக எதிர்க்க வேண்டும்'' என்ருர்

அஸ்க்கிரிய பீடமகாநயக்க தேரர் ஸ்ரீ பலிபானந்த சத்தானந்த உரையாற்றுகையில் கூறியதாவது:-

இப்புதிய யோசனைகளை அரசு அடியோடு கைவிட வேண்டும். இந்த யோசனைகளால் சிங்கள இனம் முற்ருக அழியும் அபாயம் ஏற்பட்டுள்ளது

1957-ம் ஆண்டு பண்டா செல்வா ஒப்பந்தத்தை அமுல் படுத்த விடாமல் இன்றைய ஜனதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தன மகாசங்கத்தினரின் உதவியுடன் எதிர்த்ததால்அது கைவிடப்பட்டது.

இதுபோலவே இன்றைய மகாணசபை யோசனைகளை மகாசங்கத்தினராகிய நாம் எதிர்ப்பதால் அரசு செவி மடுத்து இதனை வாபஸ்பெற வேண்டும்'' என்ருர். [ஒ இ]

## மரண அறிவித்தல்

### திருமதி ஏரம்பமூர்த்தி சிவபாக்கியம்

நீர்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஒய்வு பெற்ற தலைமை ஆசிரியை திருமதி ஏரம்பமூர்த்தி சிவபாக்கியம் காலமானுர். அன்னர் பருத்தித்துறை கணபதிப்பிள்ளை ஏரம்பமூர்த்தியின் அன்பு மனைவியும், சிவானந்தமூர்த்தி (பாபு) (பேராதனைப் பல்கலைக்கழகம் B sc), கரன் (பேராதனைப் பல்கலைக்சழகம் பொறியியல்] ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவானந்தமூர்த்தி சுதாவின் அன்பு மாமியாருமாவார். அன்னரின் இறுதிக் கிரியைகள் செவ்வாய்க் கிழமை [இன்று] பிற்பகல் 1மணி அளவில் நீர்வேலி மயானத்தில் நடைபெறும்.

[C- 4026)

### செல்லத்துரை பகவதியம்மா

கரம்பன் கிழக்கு காளி கோவிலடியைச் சேர்ந்த செல்லத்துரை பகவதியம்மா காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற செல்லத்துரை ஆசாரி அவர்களின் அன்பு மனைவியும், சத்தியசீலன், காலஞ்சென்ற குமரகுருபரன், உருத்திரசீலன், குகதாஸ், பரமேஸ்வரி, தனலெட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, திலகமணி, நவரட்ணதேவி, பிருந்தாதேவி, ராஜ காபால், நடேஸ்வரன் ஆகியோரின் அருமை மாமியாரும் ஆவார். அன்னரின் இறுதிக்கிரியைகள் இன்று (12 - 08 - 86) மாலை 4-00 மணிச்கு கரம்பன் மைதானத்தில் நடைபெறும்.

தகவல்: செ. சத்தியசீலன்
[C-4028]

### ஞானப்பிரகாசம் பெனடிற்

அளவெட்டியை பிறப்பிடமாக கொண்ட ஞானப்பிரகாசம் பெனடிற் (முன்னுள் யாழ் மத்திய கல்லூரி லிகிதர்] காலமாகி விட்டார். இவர் மாகிறேட்டின் அன்புக்கணவரும் அன்ரன் மனோகரன் [இற்ருலி) பாஸ்கரன் [ஜேர்மன்] யூடிட் அருந்ததியின் தந்தையும், காலஞ்சென்ற வெலிச்சோர் இராயப்பரின் மருமகனும் ஆவார்.

அன்னரின் பூதவுடல் இன்று 12 - 8 - 86 பிற்பகல் 4 மணிக்கு நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்து செல்லப்படும் உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிருேம்.

தகவல்: திருமதி பெனடிற்
120/5 A, பழையபூங்கா வீதி,
யாழ்ப்பாணம். [C-4030]

### திருமதி சுந்தரம்பிள்ளை அன்னபூரணம்

அன்னபூரணம் காலமானுர். இவர் வண்ணுர் பண்ணை கலட்டி ப. சி அ. சுந்தரம்பிள்ளையின் அன்பு மனைவியும் காலம் சென்ற திருமதி சிவகாம்பிகை, காலம் சென்ற பசுபதி [Wembly Theatre Kandy] திருமதி வாலாம்பிகை (Bala) காலம் சென்ற சற்குணராசா (Raju), திருமதி கருணும்பிகை (Karuna), வைத்திய கலாநிதி ஜெயநந்தராசன் (U S A) அவர்களின் அன்புத்தாயாரும், திரு வை. அரசரத்தினம் (Retired Chief Accountant Govt Service), திருமதி பரமேஸ்வரி, திரு. சோ. ஞானப்பிரகாசம் [Retired District Engineer Buildings Dept) திரு தி. ஸ்ரீகிருஷ்ணராசா (Senior Instructor-Ministry of Higher Education), திருமதி இ பத்தினி (U S. A) அவர்களின் அன்பு மாமியாருமாவார் அன்னர் 9 - 8 - 86 சனிக்கிழமை காலமாகி ஈமக்கிரியைகள் 10 - 8 - 86 ஞாயிற்றுக்கிழமை பிரம்படி ஒழுங்கை இல்லத்தில் நிறைவேறி கோம்பையன் மணல் மைதானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிருேம். [C-4013]

## முல்லைத்தீவில் இளைஞர் பலி! மற்றொருவர் காயம்

முல்லைத்தீவு, திங்கள்
முல்லைத்தீவு வைத்தியசாலைக்கு அருகாமையில் வைத்து மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர்மீது அதிரடிப் பொலிஸ் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒரு இளைஞர் பலியானுர். மற்றவர் காயமடைந்தார்.

சடலத்தையும் மோட்டார் சைக்கிளையும் பொலிசார் கொண்டுசென்றனர். இச்சம்பவம் சனிக்கிழமை நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மோட்டார் சைக்கிளில் செல்வதை அரசு ஏற்கனவே தடை செய்திருந்தது தெரிந்ததே. (இ)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டட் ஸ்தாபனத்தரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka Under number B/1003/81 Eelanadu P O. Box 49. Telegram, Eelanadu. Telephone 22389 24126.

## பாகிஸ்தான் தயாரிபபாம்

கொழும்பு திங்கள்
லங்கா சம சமாஜக் கட்சி தலைவர் கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா வீட்டிற்கு வீசப்பட்ட கிறேனட்டும், மக்கள் கட்சிச் செயலாளர் விஜய குமாரணதுங்க வீட்டருகில் கண்டெடுக்கப்பட்ட கிறனேட்டும் பாகிஸ்தானில் தயாரிக்கப் பட்டவை என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

திரு. விஜய குமாரணதுங்கவிற்கு ஏற்கனவே பலதடவைகளி கொலைப் பயமுறுத்தல் விடுக்கப் பட்டதாகத் தெரியவருகிறது. [கூ]

## 'ஷெல்' தாக்குதல் வேம்படிக்கு ரூ 10,000 நஷ்டம்

யாழ்ப்பாணம், செவ்.
யாழ் கோட்டை இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலுக்குச் சேதமடைந்த யாழ். வேம்படி மகளிர்பாடசாலைக்கு 10 ஆயிரம் ரூபாய் நஷ்டமேற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுளது.

யாழ் வேம்படி மகளிர் பாடசாலை அதிபர் காரியாலயத்து முன்னுல் நேற்று முன் தினம் ஷெல் வீழ்ந்து வெடித்ததினுல் சேதமேற்பட்டிருந்தது. கல்லூரிக்கு 10 ஆயிரம் ரூபா நஷ்டமேற்பட்டுள்ளதாக இப் பாடசாலை அதிபர் கல்விப் பணிப்பாளருக்கும், யாழ். அரசாங்க அதிபருக்கும் தெரிவித்துள்ளார். [ச-இ]

## ஆலோசனை கூட்டம்

யாழ்ப்பாணம், செவ்
யாழ். பல்கலைக்சழகத்தில் தற்போது எழுந்துள்ள நிலை தொடர்பாக அராய மாணவர்களின் ஆலோசனைக் கூட்டமொன்று இன்று 12ம் திகதி காலை யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது. (இ)